பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 8 } துந்துபி௵ மாசி௴ ௧௳ { பகுதி 8
1923௵ பிப்ரவரி௴ 12௳

கடவுள் வணக்கம்.

பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கண் மித்திரர்கள்
பக்கமுண் டெக்கா லமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
படரெனுந் திமிர மணுகாக்
கதியுண்டு ஞானமாங் கதிருண்டு சதிருண்டு
காயசித் திகளு முண்டு
கறையுண்ட கண்டர்பா லம்மைநின் னருளிற்
கருத்தொன் று முண்டா குமேல்
நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர
ஞானவா னந்த வொளியே
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
நானெனு மகந்தை தீர்த்தென்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே
மதுசூத னன்றங் கையே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்கா தலிப்பெ ணுமையே.

ஏதுக்குச் சும்மா விருமனமே யென்றுனக்குப்
போதித்த வுண்மையெங்கே போகவிட்டாய்—வாதுக்கு
வந்தெதிர்த்த மல்லரைப்போல் வாதாடி னையேயுன்
புந்தியென்ன போதமென்ன போ.

சகமனைத்தும் பொய்யெனவே தானுணர்ந்தாற் றுக்க
சுகமனைத்தும் பொய்யன்றோ சோரா—திகபரத்தும்
விட்டுப் பிரியாத மேலான வத்துவிதக்
கட்டுக்கு ளாவதென்றோ காண்.

அரும்பொருள் விளக்கம்.

1. பதி—இடம். பவிசு—திறமை. தவிசு—இருக்கை. யமபடர்—யம தூதர். திமிரம்—இருள். கதி—மோக்ஷம். ஞானமாம் கதிர்—ஞான சூரியன். காயசித்தி—தேகத்தை நீடித்தகாலம் வைத்துக்கொண் டிருத்தல். கறையுண்ட கண்டர்பால் அம்மை—ஆலகால விஷத்தையுண்ட நீலகண்டரின் பக்கல் அமர்ந்துள்ள அம்மையே.

நின்றுளிற் கருத்தொன்று முண்டாகுமேல்—உனது பாதாரவிந்தத்தில் என்மனம் மட்டும் நிலைத்து விடுமாயின். "நதியுண்ட கடலென...... ஞானவானந்த வொளியே"—எல்லா நதிகளையும் தன்னுள் ஏற்று அடக்கிக்கொண்டு தான் வித்தியாச மின்றி விளங்கும் கடல்போல் எல்லாமதங்களையும் ஏற்றுக்கொண்டு யாவற்றுக்கும் தானே ஏககடவுளாய் விளங்கும் ஞானமயமாகிய சோதியே.

(தாயுமானவரே—மற்றொரு இடத்தில்,

"குன்றாத மூவுருவா யருவாய் ஞானக்
கொழுந்தாகி யறுசமயக் கூத்துமாடி
நின்றாயே * * * " என்றார்.)

நாதாந்தரூபமே—நாததத்துவத்தைக்கடந்த உருவமே. வேதாந்தமோனமே—வேதமுடிவான மௌன நிலையே (அதாவது பிரம்மான்ம ஐக்யநிலை)

நானெனு மகந்தை—நான் என்கிற ஆணவம்
என்மதி யுண்ட—என் அறிவை விழுங்கிய
மதியான—பேரறிவான
மதிவதன வல்லியே—சந்திரன் போன்ற குளிர்ந்த பிரகாசம் பொருந்திய முகத்தையுடைய தேவியே.

குடநீர் கடல்நீரில் இலயமாவதுபோல் ஆன்மா பரமான்மாவில் ஒடுங்கி விடுவதால் அவ்வாறு கூறப்பட்டது.

"வரைராஜ......காதலிப்பெணுமையே."—உமாதேவியார் ஓர் காலத்தில் பர்வதராஜனுக்குப் புத்திரியாகப் பிறந்ததாய்க் கூறப்பட்டிருப்பதால் அவ்வாறு அருளினார்.

பகவானது அருளின்றி யொன்றும் கிட்டாதாதலாலும், அருளே சத்தியாகிய உமாதேவி யாதலாலும், அவள் பாதாரவிந்தங்களில் நம்மனம் பதிந்து விடும்படிச் செய்தால் இவ்வுலகில் அடையத்தக்க சகல போக பாக்கியங்களும், மேலுலக பாக்கியங்களும், சித்திகள், ஞானம், முத்தி ஆகிய யாவும் அடையலாம் என்பது இதன் கருத்து.

2. இது எவ்வளவு அடக்கினும் அடங்காமல் விஷயாதிகளில் ஓடியலையும் மனதை நோக்கிப் புத்திகூறியது. மனமே பிறப் பிறப்பிற்குக் காரணம்.

" இறப்பும் பிறப்பும் பொருந்த—எனக்
கெவ்வணம் வந்ததென் றெண்ணியான் பார்க்கில்
மறப்பு நினைப்புமாய் நின்ற—வஞ்ச
மாயா மனத்தால் வளர்ந்தது தோழி—சங்கர "

என்றார் சுவாமிகளே.

இத்தகையமனம் செயலற்று ஆன்மாவில் நிலைத்து நிற்கில் ஞானோதய முண்டாகி முத்தியிற் கூட்டாநிற்கும் ஆதலின் " ஏ மனமே! உன் புத்தியிருந்தவா றென்னை! சும்மா இரு என்று நான்கூறிய நல்லவழியை ஏன் எங்கோ போகவிட்டு முரட்டுத்தனமாய் அலைகின்றனை. வேண்டாம் அசைவற்று உன் நிலையில் நில் " என்றார்.

3. சகமனைத்தும் பொய்......பொய்யன்றோ—பிரபஞ்ச மனைத்தும் மாயா காரியமாதலின் கனவைப்போல் பொய்யென்ற உண்மையையுணர்ந்தால் சுகதுக்காதிக ளனைத்தும் பொய்யே யல்லவோ!

கனவினின்றும் விழித்தபோது கனவிற்றோன்றிய யாவும் பொய்யென்று தோன்றுவது போல, அஞ்ஞானம் நீங்கி ஞானோதயம் உண்டான போது உலகம் பொய்யென்பது தோன்றிவிடும். கானல் நீர்போல் தோற்ற மாத்திரமாயிருப்பினும் ஞானிக்கு அதில் விவகாராதிகள் இல்லை. ஒருகாலத்தி லிருந்து ஒருகாலத்தி லில்லாமற் போவதால் அது அநித்தியமே என்பது துணிபு. ஆகையால் மாயை அனாதியாயினும் அநித்தியமே யென்றும், அதாவது பசு பாசங்கள் அனாதியாயினும் அநித்தியமே யென்றும் பதி அதாவது பிரம்மம் ஒன்றே அநாதி நித்தியம் என்றும் கூறப்பட்டது.

பிரம்மமே ஆரோபத்தால் பிரபஞ்சமாகத் தோன்றுவதால் ஆன்ம தரிசன முண்டாகி யாவும் பிரம்ம மயமாய்த் தோன்றும்போது பிரபஞ்சம் பொய்யென்று விளங்கும். அதிஷ்டானம் தோன்றின் ஆரோபம் மறையுமன்றோ.

" இகபரத்தும்......கட்டுக்குள்ளாவ தென்றோகாண் "—பரமான்மா ஆன்மாவோடு எப்போதும் அத்துவிதமாகவே பிரிவின்றி யிருக்கிறபடியால் ' இகபரத்தும் விட்டுப்பிரியாத ' என்றார்.—அஞ்ஞான தசையில் அந்த உண்மை புலப்படாம லிருக்கிறது. அஞ்ஞானம் நீங்கி ஞானோதய முண்டானபோது அந்த உண்மை புலப்பட்டு ஆன்மா பரமான்மாவில் ஒடுங்கி விடுகிறது. அப்பர் சுவாமிகள். "......காணொணா நாதனைத்தேடி என்னுள் கண்டு கொண்டேனே " என்றும்

" விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
* * * * " என்றும் கூறினார்.

ஆனந்தபோதினி

துந்துபி௵ மாசி௴ ௧௨

மதஸ்தாபனங்கள், தேவாலயங்களின் வரும்படி.

நமது நாட்டில் அனேக மடங்களும், தேவாலயங்களும் உள்ளனவென்பதும் இவற்றிற்கு ஏராளமான வரும்படி வரத்தக்க சொத்துகள் உளவென்பதும் யாவரும் அறிந்த விஷயம். இவற்றின் வரும்படியில் செலவுபோக அதிக பணம் மிஞ்சுகிறதென்றும், அப்பணம் சரியான வழியில் செலவழிக்கப்படுவதில்லையென்ற காரணத்தால் அப்பணத்தை பாதைகள் போடுவது, கிணறுகள் வெட்டுவது, வைத்தியசாலைகள், பாடசாலைகள் அமைப்பது, முதலிய செலவுகளுக்காக உபயோகப்படுத்திக்கொள்ள அதிகாரம் பெறவேண்டுமென்றும் நமது சென்னை மந்திராலோசனை சபையில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் இன்னும் பெரும்பாலார்க்குத் தெரியாது.

இது நீதிக்கும் சட்டத்திற்கும் விரோதமானதென்றும், இதனால் அனேகங் கெடுதிகள் நேரிடுமென்றும், மத விஷயத்தில் துரைத்தனத்தார் பிரவேசிப்பது மகாராணியவர்களின் வாக்குத்தத்தத்திற்கு மாறான நடக்கையென்றும், ஆகையால் இது சட்டமாக்கப்படலாகாதென்றும் மடாதிபதிகளும், பொது ஜனங்களும் இதை யொரே வாக்காய் ஆட்சேபிக்கிறார்கள். பொதுஜன அபிப்பிராயத்திற்கும், மனவருத்தத்திற்கும் எவ்வளவு மதிப்பளிக்கப்படுமோ அது போகப்போகத் தெரியும். ஆயினும் நாம் கூறவேண்டியதைக் கூறியேதீரவேண்டும்.

1. இது இத்தாபனங்களுக்குச் சொத்தைவைத்த மூல புருஷர்கள் அதன் வருமானம் எந்த தரும கைங்கரியங்களுக்கு உபயோகப்படுத்தப்படவேண்டுமென்று கருதினார்களோ அந்த நோக்கம் ஈடேறாமற் செய்துவிடும்.

இம்மடாலயங்களெல்லாம், சுத்த ஞானிகளும், தெய்வீகத் தன்மை பொருந்தியவர்களுமான மகான்களால் தாபிக்கப்பட்டவை. இவற்றிற்குத் திரண்ட சொத்துக்களை வைத்தோர் அக்காலத்தில் இருந்த அரசர்களும், பெருங்கொடையாளிகளாகிய வள்ளல்களுமே. சில மகான்கள் நமது மதத்தின் உண்மை பெருமைகளைப் பிரத்தியட்சமாய் யாவரும் பிரமிக்கும்வண்ணம் நிரூபித்து மடங்களின் கைங்கரியங்கள் சாசுவதமாய் நடைபெறுவதற்காகச் சொத்துக்களைப் பெற்றார்கள். இதற்கு இரண்டொரு திருட்டாந்தமட்டுமே கூறுகிறோம்.

மூவாயிரவருடங்கள் யோகம்புரிந்து தமது அனுபவத்தை வருடம் ஒரு பாவாக மூவாயிரம் பாக்களால் திருமந்திரம் என்ற (இன்னும் உரைகாண்டற்கரிய) மிக்க அருமையான நூலை வெளியிட்டவரும், நந்தி யெம்பெருமானிடம் உபதேசம் பெற்றவருமாகிய திருமூலநாயனாரால் தாபிக்கப்பட்டதே திருவாவடுதுரைமடம். தமிழ்க்கல்வியில் ஒப்புயர்வற்ற மேதாவிகளும், தெய்வவருள்பெற்றவர்களுமான மகாஞானிகளில் அனேகர் இம்மடத்தின் ஆதீனத்தை வகித்திருந்தனர். இன்றும் தமிழ்மாதுக்கு அது உறைவிடமாகவும் தமிழ்ப்புலவர்க்குத் தாயகமாகவும் விளங்குகிறது. காலஞ்சென்ற மகாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களும், இப்பொழுது தமிழில் தலைமைவகித்திருக்கும் மகாவித்வான் பிரம்மஸ்ரீ சாமிநாதய்யரவர்களும் அம்மடத்தின் வழி வந்த பேரறிவாளரேயாவர்.

பிரம்மபுர ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகள் காசிக்கு யாத்திரை சென்றபோது, காசி நவாப்பைக் கண்டு, காசியில் ஒரு சைவ மடத்தைத் தாபிக்கக் கருதி மடங்கட்ட இடந்தர வேண்டுமென்று கேட்டபோது, நவாப்பிடமிருந்த மகம்மதிய குருமாரின் தூண்டுதலால் நவாப் "பழுக்கக் காய்ந்த இரும்பைக் கையிலெடுத்து உமது மதவுண்மையை நிரூபியியும்" என்றார். சுவாமிகள் அவ்வாறே யொப்புக்கொண்டு, இராஜசபை முன்னிலையில் இரும்பு பழுக்கக் காய்ந்தபோது தமது சீடனை விளித்து இரும்பு நன்றாகக் காய்ந்திருக்கிறதா பார்த்துக் கூறு என்றனர். சீடன் சென்று அக்கினிமயமாகச் சொலிக்கும் இரும்பைக் கரத்தில் தூக்கிச் "சுவாமி! இரும்பு இன்னும் சுடவில்லை" என்றான்.

அந்த அதிசயத்தைக்கண்ட நவாப்பும், அவர் குருமார்களும் சீடன் மகிமையே யிவ்வாறாயின் குருவின் பெருமை யெவ்வா

திருக்குமோவென்று பிரமித்துவிட்டார்கள். அதன்பிறகு நவாப், சுவாமிகள் பிரியப்பட்டபடி அரண்மனையினெதிரில் மடங்கட்டப் பூமியளித்ததோடு, திரண்ட மானியமும் விட்டார். சுவாமிகளின் சரித்திரத்தில் இதைப்பற்றிய விஷயங்களை இன்னும் விவரமாகக் காணலாம்.

இவ்வளவு அருமையாய் நம்முன்னோராகிய மகான்கள் மடங்களையும், கோயில்களையும் தாபித்ததும், அரசர்கள் முதலியோர் அவற்றிற்குத் திரண்ட பொருளையும் பூமியையும் அளித்ததும் எதற்காக? மகான்கள் அவற்றின் ஆதீனத்தை வகித்து ஹிந்துமதம் பரவச்செய்யவும், முத்தி விருப்புடையோர்க்கு அன்னமளித்து சாத்திரங்களைப் போதித்து ஞானோபதேசம் செய்யவும், அன்னதானம் புரியவும், மடத்தைச்சேர்ந்த ஆலயங்களுக்குவேண்டிய கைங்கரியங்களை நடத்தவும், பொதுவாய் நமது மதத்தைப் போதிக்கவுமே.

பாதைகள் செப்பனிடவும், வைத்தியசாலை பாடசாலை முதலியவைகளுக்கும் செலவுசெய்தல் பொதுநலம் என்று கூறப்படுகிறது. துரைத்தனம் நடப்பதே பொதுநலத்திற்குத்தான். ஆகையால் எந்தத் துரைத்தனகாரியத்திற்குப் பொருள் வேண்டியதாயினும் அதற்கு இத்தரும வருமானத்திலிருந்து எடுத்துக்கொள்ள அதிகாரமுண்டாகிவிடும்.

சாதாரணமாக ஜனங்களிடம் வசூலிக்கப்படும் வரிப்பணத்திலிருந்து செலவுசெய்யவேண்டிய பாட்டைகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் முதலியவற்றிற்காக இத்தாபனங்களின் வரும்படியிலிருந்து செலவுசெய்வது வெங்கடாசலபதியின் உண்டிப்பணத்தையெடுத்து அல்லாபண்டிகை நடத்துவதுபோலாகும்.

மந்திரிமார்களாகவிருக்கும் நம்மவர்களே நமது மதத்திற்கு இடையூறு செய்யத்தக்க காரியத்தைச்செய்ய நினைப்பது மிக்க விசனிக்கத்தக்கதே. இதோடு இது 1858ஆ நவம்பர்மீ 1௳ காலஞ்சென்ற கனம்பொருந்திய விக்டோரியா மகாராணியவர்கள் 'மத விஷயத்தில் துரைத்தனத்தார் தலையிடுவதில்லை' யென்று அளித்த வாக்குக்கு விரோதமாகவிருக்கிறது.

சில மடாதிபதிகள் மதத்தைப் பாதுகாப்பதிலும், பரவச்செய்வதிலும் சிரத்தையின்றி மடத்து வரும்படியை, துரைத்தன அதிகாரிகள் முதலியவர்களுக்கு விருந்தளித்தல், வழக்காடுதல்

முதலிய தகாத விஷயங்களில் செலவு செய்ததும் செய்வதுமே இதற்குக் காரணமாயிற்று. ஆனால் அப்படி அவர்கள் நடவாதபடி தடுக்க வேறு திருப்திகரமான மார்க்கங்கள் எவ்வளவோ விருக்கின்றன. இப்போது கையாட முயலும் மார்க்கம் மதத்திற்கே அழிவையுண்டாக்கக்கூடியது. அதற்கஞ்சியே நாம் இதை வரையத் துணிந்தோம். எவ்வாறு இது மதத்தை யழிக்குமெனின்:—

1-வது.—சில மடாதிபதிகள் மதத்தின் வருமானத்தை யிக்காலத்திற்கு அவசியமான மதப்பிரசாரம், மதபோதனை முதலிய தக்க வழிகளில் செலவிடாமல் மனம்போனபடி செலவு செய்கிறார்கள் என்ற வதந்தி யுண்டாகியிருப்பதால் ஜனங்களுக்கு அந்த ஸ்தாபனங்களிலிருந்த பக்தியும் மதிப்பும் குன்றத் தலைப்பட்டிருக்கின்றன. இம்மடாதிபதிகள் கடவுளுக்கு இரண்டாவதாகக் கருதப்பட்டவர்கள். அவர்களிடம் ஜனங்களுக்கு பக்தியும், நம்பிக்கையும் குன்றின் மடத்தின் பெருமைக்கும், வருமானத்திற்கும் அது இடையூறு செய்யும் என்பதிற் றடையேயில்லை.

2-வது.—இத்தகைய சமையத்தில் மடவருமானம் பாதை போடல், கிணறுவெட்டல், வைத்தியசாலை பாடசாலை தாபித்தல் முதலிய மதசம்பந்தமில்லாதவையும் தரும சம்பந்தமல்லாதவையுமான வழிகளில்—அதிலும் மடாதிபதிகளாலன்றி அன்னியரால்-செலவழிக்கப்படலாம் என்ற ஏற்பாடுண்டாகினால், பிறகு ஜனங்கள் அதை ஒரு மதசம்பந்தப்படாத மடம் என்று கருதி ஒரு காசுமளிக்க மாட்டார்கள்.

3-வது.—கல்வியாளராகிய ஞானவான்களே பெரும்பாலும் மடாதிபதிகளாக அமர்கிறவர்கள். அவர்கள் அம்மடத்திலும் அதைச்சேர்ந்த விவகாரங்களிலும் பூரண சுயாதீனத்தோடு நடந்துகொள்வோர்.

அத்தகையோர் சுயாதீனம் கட்டுப்படுத்தப்பட்டு மடத்தின் வருமானத்தை அன்னியர் செலவுசெய்யவும் அதிகாரம் ஏற்பட்டுவிடின், அப்பதவியை உண்மையான ஞானிகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். சுயநலங் கருதி அதிகாரிகளுக்கு ஐக்கியப்பட்டு நடக்கக் கூடியவர்கள்தான் அப்பதவியை யேற்றுக் கொள்வார்கள். அத்தகையோர் ஒருபோதும் அப்பதவிக்குத் தகுதியுடையோராகார்கள். மடத்திற்குச் செல்வவந்தர் பெருந் தொகையான பணமளிப்பதும், மடத்திற்கு மதிப்பும் மகிமையும்

ஏற்படுவதும் அந்த மடத்தின் அதிபதியாயுள்ளோர் உண்மையான மகானுக விருப்பதைப் பொருந்தியதாகும்.

அத்தகையோர் அப்பதவிக்கு வருவதொழிந்தால் கொஞ்சக் காலத்திற்குள் மடம் என்ற பெயரே யொழிந்துபோம்-அதோடு நம்மதமும் போம்.

4-வது.—இப்போது அன்னியமதபோதகர்கள் நம்மதத்தை யழிக்கவும், நமது மதத்தவரை யெல்லாம் தங்கள் மதத்தில் சேர்க்கவும் பலவித தந்திரமான வழிகளில் பலமான முயற்சி செய்கிருர்கள். கிருஸ்தவர்களாகிய அவர்களுக்கு இராஜாங்கத்தின் அனுசரணை யிருக்கிறது. அந்த மத போதகர்களுக்கு அவர்கள் நிதிகளிலிருந்து சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் ஆங்காங்கு பாடசாலைகளை வைத்து நம் நாட்டிலுள்ள தாழ்ந்த வகுப்பாருக்குக் கல்வி கற்பித்தல், உடை, உணவு அளித்தல், ஜீவனத்திற்கு வழிகாட்டல், அவர்களைச் சீர் திருத்தல் முதலிய காரியங்களைச் செய்து தங்கள் மதத்தில் சேர்த்துக்கொள்கிருர்கள்.

அந்தோ! இச்சமயத்தில் நமது மடங்கள், மதஸ்தாபனங்கள், கோயில்கள், இவைகளின் வரும்படியை முக்கியமாய் இத்தகைய வழிகளில் நாம் செலவு செய்யவேண்டியது இன்றியமையாத கடமையாயிருக்கிறது. நமது சகோதரராகிய தாழ்ந்த வகுப்பாரைச் சீர்திருத்தி, அவர்களுக்காகத் தருமபாடசாலைகளை யேற்படுத்தி, அவர்களுக்கு மதக்கல்வியுமளித்து வேண்டிய உதவிகளைச் செய்து அன்போடு ஆதரித்து, அவர்கள் தங்கள் முன்னேரின் சத்தியமும் பூர்வீகமுமான மதத்தை விட்டு நீங்காவண்ணம் செய்யவேண்டியதல்லவோ மதத்தைக் காப்பாற்றுவதற் கடையாளம்.

இத்தகைய சமயத்தில் அதற்கு நேர்மாருக மடங்கள் என்ற பெயரே மறைந்துபோகும் வண்ணம் மேற்கண்ட மசோதா சட்டமாகும்படிச் செய்தால் அன்னிய மதத்தார் நமது மதத்தை யழிப்பதற்கு, அவர்களுக்கு உதவிசெய்வதேயாகும். நேரே யுதவி செய்யவில்லையென்ருல், நமது மதத்தாபனங்களின் செல்வத்தை (வேறு வழியில் செலவழிப்பதால்) குறைத்து, மதப் பிரசாரம் செய்வதற்கு அவசியமான அனுகூலங்கள் இல்லாமற் செய்யும் வழியாய், அன்னிய மதஸ்தர் நமது மதத்தை யழிக்க உதவி செய்வதாகவே ஆகிறது.

நமது ஆசாரம், சீர்திருத்தம், நாகரீகம் யாவற்றிற்கும் மதமே

அஸ்திவாரமன்றே. தருமம் செய்வதாயினும் காலத்திற்குத் தக்க தருமத்தையன்றே செய்யவேண்டும். நமது மதத்தைப் பாதுகாக்கவேண்டியது அவசியமாயிருக்கும் இக்காலத்தில் அதற்கு வேண்டியதைச் செய்வதை விட்டுப் புது மடங்கள் கட்டுதல், கோயில்கள் கட்டுதல் முதலிய காரியங்களைச் செய்வது சுவரின் அஸ்திவாரத்தை வெள்ளம் அறுத்துக்கொண்டிருக்கையில் மேலே சித்திரம் எழுதிக்கொண் டிருப்பவன் செயலாகுமே யன்றி வேறில்லை.

ஹிந்துக்களுக்கு மதமே ஆன்மாவினும் சிறந்ததென்றும், சனாதன தர்மத்திற்கு மேற்பட்ட தொன்றுமில்லை யென்றும் வாயாற் கூறிக்கொண்டு, மதத்திற்குக் கேடுண்டாவதைத் தடுக்காமல் வாளா விருப்பதில் பயனென்னை. முற்காலத்தில் நம் முன்னோராகிய சமயாசாரியர்கள், ஆழ்வாராதியர் முதலிய மகான்கள் புறமத கண்டனம் செய்து நமது மதத்தை நிலைநிறுத்தினர். சங்கராச்சாரியர் பாரதபூமி முழுதும் சென்று புறச்சமயங்களை வாதில் வென்று திக்விஜயம் செய்து நமது மதத்தை நிலைநிறுத்திப் பரவச் செய்தார். இப்போதுள்ளவர்கள் மதத்தைப் பாதுகாக்கவாவது சிரத்தை யெடுத்துக்கொள்ளவேண்டாமோ. முன்னே நமது மதத்திற்கு மிக்க தீங்கு விளைவிக்கத்தக்க இம்மசோதா சட்டமாகாவண்ணம் தடுக்கவேண்டியது ஹிந்து என்ற ஒவ்வொருவனுக்கும் முதற்கடமையாகவிருக்கிறது.

"ஓ! எம்பொன்னம்பலக் கூத்தரே! இடிவிழச் செய்தும், வைகையில் ஏடேறவிட்டும், சம்பந்தர் எழுதிய ஏடு தீயில் வேகாது செய்தும், நீற்றறை குளிர்ச்சியாயிருக்கச்செய்தும், கருங்கல் தெப்பமாகச் செய்தும், விஷ மமுதாகச் செய்தும், நல்லரவின் விட நீங்கச் செய்தும், முதலையுண்ட மகவை உயிர்பெற்று வரச் செய்தும் இவ்வனாதிமதம் நிலைத்தோங்க வருள்புரிந்த கருணாநிதியே! உமது பேரருளே இவ்விக்கட்டினின்றும் நம்மதத்தைக் காத்தருளல் வேண்டும். 'நம்மவர்க்கு அதிகாரம் கிடைத்தால் நமக்கே தீங்காய் முடியும்' என்று கூறுவோர் வாக்கு மெய்யாக முடியாவண்ணம் கிருபை பாலிக்க வேண்டும்" என்று நாம் அனைவரும் ஆனந்தத் தாண்டவம் புரியும் ஆதிநாயகனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

" தந்தையை மறப்பதும் தகுதியோ "

" உயர்வற வுயர்நல முடையவன் யவ னவன்
மயர்வற மதிநல மருளினன் யவ னவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவ னவன்
துயரறு சுடரடி தொழுதெழன் மனமே
(திருவாய் மொழி)

" பிறப்பென்னும் பேதைமை நீங்கச்சிறப் பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு (ஆன்றோர்)

எமதன்பின் மிக்க நண்பர்காள் !

கண்டிநகர்வாசரு மெமதாப்த நேச விஸ்வாசரும் சிற்சில நூல்கட்காசிரியருமாகிய ஸ்ரீமக் சு. செல்வநாயகம் அவர்கள் ஆனந்தபோதினியில் "தாயை மறப்பதும் தர்மமா" என்ற மகுடம் புனைந்தற்புதமாய் பகிரங்கப் படுத்திய வாசகத்தைக் கண்ணுற் றகமகிழ்ந்தேம்.

அவ்வரும் பெரும் வாக்கியங்களனைத்தையும் நோக்குங்கால் எமக் குத்தேனெனத் தித்தித்ததன்றே. சுடர் விளக்காயினும் தூண்டுகோ லொன்று வேண்டுமென்ற ஆன்றோர் வாக்கைக் கைக்கொண்டின்னவரை மேன்மேலு முற்சாகப் படுத்துமாறு எம்மாலியன்றவரை இந்த "தந்தையை மறப்பதும் தகுதியோ" என்ற வியாசத்தை வரையத் துணிந்தேம் என்க.

இன்னவரின்னு மிதனைப்போன்ற "ஸத்" விஷயங்களை இம்மாநிலத் தாருக்குப் புகட்ட முன்வருவரேல் பெரும்பாலும் நன்மை பெருகுமென் பதை யாமீண்டு மிவண்கண் பொறிப்பது மாவசியக மின்றே. இவ்வரிய ஸஜ்ஜன இளவலைப்போலின்னும் பலர் முன் வருவரேல் நமது "சிவமதம்" மிகவு முன்னதஸ்தானத்திற்கு வரும் என்பதும் எட்டுணையும் திண்ணமே. இதுநிற்க,

அண்டபிண்ட சராசரங்க ளெல்லாவற்றிற்கும் அதி சிரேஷ்டகர்த் தாவும் எல்லா மங்களங்கட்கு மாதிபீடமுமாகிய சிவபெருமானே பரம பிதாவென்பது முண்மையே. அப்பிரான் ரூபியாயு மரூபியாயுமிருக்கிற தாகவுமெழுதாக்கிளவி விளம்புகின்ற தன்றே ? அஃதெவ்வாறெனில்,

" மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் மாசொன் றில்லா
னொப்புடைய னல்ல னொருவ னல்ல
னோரூர னல்ல னுவம னில்லி
யப்படியு மந்நிறமு மவ்வண் ணமு
மவனருளே கண்ணாகக் காணி னல்லா
லிப்படியன் இந்நிறத்த னிவ்வண் ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே "

என்றும் பெரியோர் கூறியுள்ளார்.

அப் பரமபிதாவானவர் ஆதி அனாதியராய், ஆதியந்த மில்லாதவராய், ஆதிமத்தியந்த ரஹிதராய், அநாதிமல முத்தராய், சர்வ வியாபகராய், நித்தியராய், சர்வஞ்ஞராய், சர்வானுக்கிரகராய், சர்வகர்த்தராய், அடியார்களிடர்களையும் அருட்பெருஞ்ஜோதியாய், சின்னமாத்திர மூர்த்தியாய், அதிசூக்மராய், அதிமகானாய், நிராதரராய், நிர்க்குணராய், சார்தராய், சர்வதோமுகராய், சுயம்புவாய், நிருபாதிகராய், சுவப்பிரகாசகராய், அதிபரமாப்தராய், தனக்குவமை யில்லாதவராய், அநாதரக்ஷகராய், மார்க்கசகாயகராய், ஈறில்லாதவராய், மாறில்லாதவராய், சிறியதற்குச் சிறியதும், பெரியதற்கதினும் பெரியதுமாய் எங்கும் விளங்கி, படைத்தல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அநுக்கிரகித்தல் என்னும் பஞ்ச கிருத்தியங்களையும் தம் பிரயோசனங்குறியாது ஜீவகோடிகளி னயங்கருதிச் செய்தருளும் ஜகத்பதியாயுள்ளவர்.

அவர் அமல, விமல, நிர்மல, ஸ்வச்ச பிரசாந்த, அவியாகுல நிராகுல, சாந்தசித்த, சுத்தசாட்குண்ய, ஸர்வவல்லப கிருபாகரர் என்றும் எல்லா மங்கள லக்ஷணங்களும் பொருந்திய சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்றும் சர்வலோகங்கட்கும் இவரே பரமபிதாவென்றும் இவர் அருளிய வேதமே, அனாதி மதமென்றும் சாஸ்திரம் முறையிடுகின்றது.

இந்த மார்க்கத்திலேயே தான் நித்தியமான மோக்ஷ சாம்ராஜ்யத்தை யடையும் வழி வகைகளையும், வேதம், ஆகமம், ஸ்மிருதி, புராணம் முதலிய பகிரங்கசாஸ்திரதாற்பரியங்களையும், முத்திக்கு மார்க்கமாகிய ஞானம், பக்தி, நிஷ்டை, யோகம், கருமம் முதலிய அந்தரங்க பகிரங்க சூக்குமமான அரியபெரிய விஷயங்களையும் நன்குணரலா மென்பதும், சரிகை, கிரிகை, யோகம், ஞானம், என்னுமிந்த நான்கு ஸாதனங்கட்கும் முறையே 1. சாலோக 2. சாமீப 3. சாரூப்ய 4. சாயுச்சிய என்று சொல்லப்படா நின்ற பதவிகள் லபிக்கும் விதிகளும் தெள்ளத் தெளிய விளங்குகின்ற தென்பதும் வெளிப்படையே.

இப்பரம பிதாவை அதி சிரத்தையுடன் அவரின் திருநாமத்தை சிவமே என்று மூன்று தரம் உச்சரிப்பவரை அவர் பிரியமாய் ரக்ஷிப்பார் என்பதாம். அஃதெவ்வித மெனில்,

"சிவனே சிவனே சிவனே என்பார் பின்
சிவனுமையாளோடுந் திரிவன்-சிவனருளாற்
பெற்ற விளங்கன்றைப் பிரியாமற் பின்னோடிச்
சுற்றும் பசுப்போற் றொடர்ந்து."

ஆகவே மேற் கூறி யிராநின்ற சாயுச்சிய பதவியடைய ஞானம் வேண்டும்(ஞானம் என்பது வேதாந்ததத்துவம்) இதில் துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்று மூன்று வகைப்படும். துவைதம், என்பது ஆத்துமா வேறு பரமாத்மாவாகிய பிரம்மம் வேறு என்பது, அத்வைதம்

என்பது ஆத்மாவும் மற்றவைகளும் பிரம்மமும் ஒன்றே என்பதாம் வைஷ்ணவர்கள் அநுசரிக்கும் விசிஷ்டாத் வைதம் என்பது பிரமம் வேறு என்றும் ஆத்மாவும் மற்றவைகளும் வேறு என்றும் பிரமமும் ஆத் மாவும் ஒன்றும் என்றும் சொல்வதேயாம் அதெப்படியென்றால்,

இப்பூலோகத்தில் ஆத்மாவும் மற்றவைகளும் வேறாக விருந்து கடைசியில் தெய்வத்தன்மை போன்ற உருவங் கொண்டு கடவுள் சந்நி தானத்திலேயே சேர்ந்திருக்கிறதென்று கொள்ளும் எண்ணம்.

மேற்கண்ட ஞானங்களை பிரம்ம சூத்திரத்தினின்றும் போதாயனர் வியாக்யாநம் பண்ண இதைக்கொண்டு சிவபெருமானே சங்கராச்சாரிய ராக அவதரித்து பாஷியம் செய்து அத்வைதம் என்பதை நிலை நிறுத் தினதுடன் அக்காலத்தில் பிராமண மதத்திற்கு விரோதமான பௌத்த ஜைனியமதங்களைக் கண்டித்து திக்விஜயம் செய்தார் அத்வைதத்தை மத் வாசாரியார் என்பவர் மேற்படி சூத்திரத்தால் நிலை நிறுத்தி பாஷியம் செய் தார்.

விசிஷ்டா த்வைதத்தை ராமாநுஜாசாரிய ரென்பவர் சங்கராசாரி யரைப்போலவே நிலை நிறுத்தினர்.

இந்த ஞானவிஷயமானது மிக வெளிதில் தேர்ந்து கொள்ளத்தக்க தன்று. ஆகலினிதற்கு பரம தந்தையாராகிய சாக்ஷாத் சிவபெருமானே நல்லருள் பாலிக்கும் கிருபை யுடையாரென்பதும் சாலவும் உள்ளங்கை நெல்லிக்கனியே. இஃதெவராலும் பிறிதாகாத காரியமன்றோ?

எங்கள் பரமபிதாவாகிய சிவபெருமான் தம் மெய்யடியார்களை ஆட் கொள்ளுமாறு தாமாகவே வந்து காட்சி கொடுத்தருளி யிருக்கிறதாகவும் பல சைவநூல்கள் அன்று மின்று மென்றும் சான்றாகுமன்றோ. உதாரண மாக ஸ்ரீ கண்ணப்ப நாயனார் இன்னும் பல பக்த சிரோன் மணிகளின் திவ்ய சரித்திரங்களில் காண்க. ஆகலின்,

இப்பெருங் கருணைத் தடங்கடலாகிய தந்தையை நாம் எங்ஙன் மறப்பது தகுதி. அந்தோ என்றன் அரிய நேசர்காள் இனியாகுதலிவ்வரிய வாசகத்தைச் சிந்தித்து நினைமின் நினைமின் நித்யராகிய எந்தையை சிவ பெருமானை நினைமின் நினைந்துய்மின் சுபம்!!

ப. இராமலிங்கப்பிள்ளை

வாரியப்பளை, மாத்தளை, சிலோன்.

கதர் உடை யேன் தரிக்கவேண்டும்?

நாம் டிராம் வண்டியில் வந்துகொண் டிருக்கையில் "சுயராஜ்யங் தான் இன்னும் வரவில்லையே, கதர் உடையேன் தரிக்கவேண்டும்?" என்ற சொற்கள் நமது செவியில் வீழ்ந்தன. இதைக் கூறியவர் ஓர் சாதா

ரண மனிதர். இதனால் நமது நாட்டுப் பாமர ஜனங்களின் அறிவு என்ன நிலைமையி லிருக்கிற தென்பதும், நமது க்ஷேமத்திற்காக நாம் செய்ய வேண்டியது இன்ன தென்பது கூட அவர்களுக்கு விளங்கவில்லை யென்பதும் தெரிகின்றனவன்றோ. இன்னும் தேச பக்தி யின்னதென்றே இவர்களுக்குத் தெரியவில்லை யெனலாம்.

சுயராஜ்யம் வருவதானால்தானா கதர் உடை தரிக்கவேண்டும்? கதர் உடையென்றால் என்ன? அது ஒரு விசேஷ ஆபரணமா? அல்லது ஜெயவிருது என்ற எண்ணமோ? அப்படி யொன்றுமில்லை. சுயராஜ்யம் வருவது என்பது பிரத்யேக விஷயம். 'கதர் உடை' என்றால் நம் நாட்டிலுற்பத்தியாகும் பஞ்சை நாமே நூலாக நூற்றுத் தரியில் சீலையாக நெய்து தரித்துக்கொள்ளும் உடை யென்பதே பொருள். அதாவது நம்நாட்டுத் துணிகளை நாம் உடுத்துக்கொள்ள வேண்டு மென்பதே அதனர்த்த மன்றி வேறில்லை. நமக்கு அப்புத்தி வந்தால் பிறகு சுயராஜ்யம் தானேவரும்.

உலகில் மனிதர் வாழ்க்கைக்கு முக்கியமாய் வேண்டியவை பசியை யொழிக்க உணவும், மானத்தை மறைக்கக் குளிர் வெயிலைத் தாங்க உடையும் ஆக இரண்டேமே. மிருகங்களுக்கு உணவு ஒன்றே வேண்டும். எந்தத் தேசத்தார் தங்களுக்கு வேண்டிய உணவு உடை இவற்றைத் தாங்களே யுற்பத்திசெய்து கொள்ள வில்லையோ அவர்கள் மனிதராகவாழ அருகரல்லவென்றே கூறலாம். நம்மானத்தை மறைக்க உடைக்கு அந்நியநாட்டை யெதிர் பார்த்துக்கொண் டிருப்போர் வாழ்க்கையும் ஒருவாழ்க்கை யாகுமோ. அதைவிடச் சோம்பேறித்தனமும் அகௌரவமும் வேறில்லை. அதோடு அது தரித்திரத்தை யுண்டாக்கு மென்பது திண்ணம். கடவுள் நமக்கு வேண்டிய இயற்கைப் பொருள்கள் யாவும் நம் நாட்டில் உற்பத்தியாகுமாறு அருள் புரிந்திருக்க நமக்கு நாமே தரித்திரத்தை யுண்டாக்கிக் கொள்வது மதியீனமன்றோ.

நம் நாட்டில் உற்பத்தியாகும் உடையையே நாம் தரிப்பதால் பலவித நன்மைகள் நமக் குண்டாகின்றன. எவ்வாறெனின்;—

1-வது. பருத்தியைப் பயிர்செய்வதால் விவசாயம் அதிகமாக நடைபெறுகிறது.

2-வது. அப்பருத்தியை வர்த்தகர் மொத்தமாய் வாங்கிவைத்துக் கொண்டு சில்லரையில் நூல் நூற்போர்க்கு விற்று இலாபம் பெறுகிறார்கள். இதனால் வர்த்தகமும் நடக்கிறது.

3-வது. பஞ்சை நூலாக நூற்பதால் நம் நாட்டிலுள்ள ஏழைகள் ...வர், பெரும்பாலான மாதர், இவர்களுக்குச் சீவனத்திற்கு வழியேற்படுகிறது.

4-வது. பிறகு இந்த நூலைக்கொண்டு வஸ்திரம் நெய்வதால் நெசவுத் தொழில் விர்த்தியடைகிறது.

5-வது. நூலுக்குப் பலவித நிறங்கொடுக்கும் வேலையில் சாயம்போடு வோர்க்கும் வேலையகப்படுகிறது.

6-வது. வர்த்தகரே, நெய்த வேஷ்டிகள் சேலைகள் முதலியவற்றை வாங்கிச் சில்லரையில் விற்கவேண்டும். இதனுல் நாட்டு ஜவுளி வியாபாரம் அதிகமாகும்.

7-வது. நமது நாட்டில் கூலிகுறைவு. மேலும் நம் நாட்டுத் துணிக ளின் விலையில் எவ்விதமான வரியும் ஏற்றப்படுவதில்லை. அதனுல் துணி விலை சரசமாகும். நம் செலவு குறையும்.

8-வது. இதுமட்டு மல்ல. நாம்கொடுக்கும் நூல் நூற்கும் கூலி, நெசவுக்கூலி, சாயக்கூலி, வர்த்தகர் இலாபம் ஆகியயாவும் நம் நாட்டாரே-நமது சகோதரரே-யடைகிறுர்கள். இவர்களெல்லாம் ஒரேகுடும்பமாயின் நாம் கொடுக்கும் பணம் குடும்பத்திலேயே யிருக்கிறது; யாவர்க்கும் உண வாகிறது. உடையும் சும்மாகிடைத்த தாயிற்று.

நாம் நம் நாட்டுத் துணியையே யுடுப்பதால் நாம் செலவிடும் பணம் நம் நாட்டிலேயே நம் சகோதர சகோதரிகளுக்கே அளிக்கப்பட்ட தாகிறது.

இதை விட்டு அந்நிய நாட்டுத் துணிகளை யுடுத்தால் எல்லாவிஷயங்க ளிலும் இவற்றிற்கு நேர்மாறுன பலனே யுண்டாகிறது. அவற்றைச் சுரு க்கமாகக் கூறுகிறேம்.

நமது நாட்டி லுற்பத்தியாகும் பஞ்சு வெளிநாட்டிற்குச் செல்கிறது. அதுமுதல் அது துணியாகிவந்து நமது தேகத்தி லேறுமட்டும் அது சம் பந்தமாய் எதெதற்கு நாம் பணம் கொடுக்கிறேம் தெரியுமா?

1-வது. பஞ்சுக்கு இங்கிருந்து ஏற்றுமதி வரி, சீமையில் இறக்குமதி வரி, கப்பல் கூலி.

2-வது. நூல் நூற்கும் கூலி.

3-வது. நெசவுக்கூலி.

4-வது. சாயக்கூலி.

5-வது. அங்குள்ள வர்த்தகர்லாபம்.

6-வது. துணிவரும்போது சீமையில் ஏற்றுமதி வரி, இங்கு இறக்கு மதி வரி, கப்பல்கூலி, கிடங்குக் கூலி.

7-வது. இங்கு அவற்றைவிற்கும் கம்பெனிக்குத்தரகு, தரகர்கூலிகள்.

8-வது. அதை வாங்கும் நமது வர்த்தகர்களின் செலவு, இலாபம், இவ் வளவும் துணியின் விலையோடு சேர்கிறது.

நேயர்களே! இத்தனைசெலவில் நம் நாட்டுவர்த்தகர் பெறும் இலா பம் ஒன்று தவிர மற்றயாவும் அன்னிய நாட்டாரே யடைகிறுர்கள். அதி லும் அந்நியாட்டுக் கூலி விகிதம் மிக்க அதிகம். நம் நாட்டுப் பஞ்சுக்கே இவ்வளவும்கொடுத்து நாம் அதைத்துணியாய் வாங்கிக் கட்டிக்கொள் கிறேம்.

இப்படி நாம் மூடத்தனமாய் நடந்துகொண்டால் தரித்திரம் நம்மைப் பாதாளத்தி லழுத்தக் கேட்க வேண்டுமோ. சற்று அறிவைக்கொண்டு நாம் கூறியவிஷயங்களைக் கவனித்துப்பார்த்தால் கதர்உடை தரிப்பதால் எத்தகைய நன்மை யிருக்கிறது, கௌரவ மிருக்கிறது என்பது நன்கு விளங்கும். நம் நாட்டின் தரித்திரம் ஒழிந்து நாம் க்ஷேமப்பட வேண்டுமோ யின் நம் நாட்டுத்துணியையே நாம் கட்டவேண்டு மென்றும், இன்றேல் நம் நாட்டிற்கு நாமே தீங்குவிளைக்கும் துரோகிகளாகிறோம் என்பதும் நன்குவிளங்கும.

சகோதர சகோதரிகளே! இனியேனும் நம் தாய்நாட்டின்-பாரதமாதின்-நன்மையைக் கருதிப் பாபத்திற்கஞ்சி நம் நாட்டில் நூற்று நெய்யப்பட்ட துணியையே யணியுங்கள். பாரதமாதாவாகிய பராசக்தி அருள் புரிவாளாக.

சீடன்.

கம்பராமாயண நீதிச் செய்யுள்.

(257-ம் பக்கத்தொடர்ச்சி)

அரியரர் தம்முள் அபேதராகையால், சிவன் பெரியவன் விஷ்ணு பெரியவனெனப் பேதித்துத் துவேஷம் பாராட்டி வாதாடித் திரிவோர் நற்கதி யடையாரென்னுங் கருத்தைக்கொண்ட,

அரனதிக னுலகளந்த அரியதிக னென்றுரைக்கு மறிவிலோர்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோல் *
* * * * (கிட்கிந்தா-நாடவிட்ட-24.)

என்ற செய்யுளும் ஈண்டறியத் தக்கதாம்.

11. இறப்பெனு மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறப்பெனு மதனின்மேற் கேடு மற்றுண்டோ
துறப்பெனுந் தெப்பமே துணைசெ யாவிடிற்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ.

(அயோ-மந்திர்-21)

சக்கரவர்த்தியார் நாட்டை ஸ்ரீராமனிட மொப்புவித்துத் தாம் துறவு மேற்கொளல் வேண்டுமென்றெண்ணித் தனயனை விளித்து, "கண்மணி! இவ்வுலகத்தில் எல்லாவற்றினும் வெகு நிச்சயமாய்க் கூறக்கூடுவது மரணமே. அது தவறாது நம்மை வந்தெய்தும் என்னும் உண்மையை மறப்பதைவிட மன்னுயிர்க்குப் பிறிதொரு கேடுமுண்டோ? இல்லை. தவிர, அம் மரணத்திற்குக் காரணமாகிய ஜனன சாகரத்தைத் துறவென்னுந் தெப்பத்தாலன்றி வேறொன்றாற் கடத்தலியலுமோ? ஆகையால், யானும் அத் துறவையடைய விழைந்தேன்" என்றனர் என்பது இதன் பொருளாம்.

இஃதோர் சிறந்த உபதேசம். மரணத்தின் வாயினின்றும் தப்பிப் பிழைத்தோ ரெவருமிலர். நாம் கூற்றுவன் வாயிலிருக்கிறோம். வாயை மூடி அவன் நம்மை விழுங்குங் காலம் எப்போதோ? "இப்பவோ

பின்னேயோ இன்னும் சற்று நேரத்திலோ?" "நேற்றிருந்தான் இன்று வெந்து நீருனன்," என்னும் பெருமையுடைய இவ்வுலக வாழ்க்கை என்னும் இக்கொள்கையை மறவாது மனத்தமைப்போமாயின், அஃதொன்றே நம்மை யீடேற்றும் மார்க்கமாகும். எவ்வித தீய காரியங்களையும் செய்ய வொட்டாது. சகல பந்தங்களையும் போக்கும். நாம் அதைச் சுத்தமாய் மறந்தேவிட்டோம். கற்ப கோடிகாலம் வாழ்ந்திருப்போ மென்னு மெண்ணமே நம் மனத்தில் வேரூன்றிக் கிடக்கிறது. இம்மறதியே எல்லாக் கேடுகளுக்குங் காரணம். ஏதோ மயான வைராக்கியமாய்ச் சில வேளைகளில் உண்டாம் நினைப்பும் உடனே அஞ்ஞானத்தால் மறைக்கப்பட்டு விடுகிறது. அவ்வஞ்ஞானத்தை நீக்கி, இதைச் சிந்தித்துக்கொண்டேயிருப்போமாயின், பிறவிக் கேதுவாகிய எல்லா வகைத் துன்பங்களினின்றும் விடுபடுவோம். இதை மறப்பதைவிடக் கெடுதி வேறில்லை யென்பது முதலிரண்டடிகளின் கருத்தாம்.

பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம். (மணி மேகலை)

என்றபடி, பிறவியே துன்பத்திற் கிருப்பிடமாவது. பிறவி யுள்ளவரை துன்பம் நீங்குவதில்லை. அப்பிறவியோ கடலைப்போல் கடத்தற் கரியது. சர்வ துக்க நிவிர்த்தியை விரும்புவோர் பிறவியாகிய கடலைக் கடத்தல் வேண்டும். அதற்குப் புணையாயிருப்பது துறவேயாம். அது "யான், எனது" என்னும் அகங்கார மமகாரங்களாகிற அகப்பற்று புறப்பற்றுக் களை விடல்.

யானெனத் தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த வுலகம் புகும்... ... ... (குறள்)

இத்துறவை யடைந்தோரே பிரம்மஞான வாயிலாகப் பிறப்பை யொழிப்பார். ஏனையோர்க்காகா. இதுவே தவமெனப்படுவது.

(ஈண்டுத் தயரதன் கருதியது புறத்துறவே, அது மனைவியோடு செல்லில் வானப்பிரஸ்த மென்னப்படும். ஆயினும் அகத்துறவின்றிய புறத்துறவு பயனற்ற தாகலானும், இல்லறம் இடையூறுண்டாக்குமென்பது கருதியே துறவறங் கொள்ளவேண்டு மென்பராகலானும், இவ்வாறு கொள்ளப்பட்டது.)

இக்கருத்தைக்கொண்ட இந்நூலிலுள்ள வேறுவாக்கியம்.

துறத்தலும் நல்லறத் துறையு மல்லது
புறத்தொரு துணையிலை பொருந்து மன்னுயிர்க்கு.

* * * * * *

12. தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வரும்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
நாமமில்லை நரகமு மில்லையே. (மந்தரை சூழ்ச்சி-21)

பட்டத்திற் கொப்பிய இராமனுக்கு நீதிகளைக் கூறும் சந்தர்ப்பம், "ஸ்ரீராமா! இவ்வுலகக் கேட்டிற் கறி குறியாகத் தோன்றும் தூமகேது வென்னும் ஓர்வகை வால் நக்ஷத்திரம்போலுள்ள, பரஸ்திரீகளா லுண்டாகும் காமமென்பதில்லையானால், கேடு என்பது மொன்றிராது. நரகமுமிராது." என்று கூறப்பட்டது. இதனால்,

"பகை பாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்"

என்ற திருமறையின்படி, பிறர்மனை நயத்தலாகிய காமத்தால் பல கெடுதிகளுண்டாம். செல்வம், அறிவு, அழகு முதலிய கெடும். நரகஞ் சித்திக்கும். இக்காமமே கொடிய பகையாகும். பல நாளும் பல துன்பங்களையுந் தந்து இம்சிக்கும் காமத்தினும் உண்டவுடன் உயிர்போக்கும் நஞ்சே சிறந்தது. ஆகையால் இக்காமத்தீயை அறிவென்னும் நீரால் அவித்தொழுகல் வேண்டுமென்பது அறியக்கிடக்கின்றது.

இக்கருத்தைக் கொண்ட இந்நூலிலுள்ள வேறு செய்யுள் வாக்கியம்.

"காமத்தாற் கனலும் வெந்தீ, சீலத்தா லவிவதன்றிச் செய்யத் தானுவதுண்டோ."

13. பரவு கேள்வியும் பழுதில் ஞானமும்
விரவு சீலமும் வினையின் மேன்மையும்
உரவி லோய்தொழற் குரிய தேவரும்
குரவ ரேயெனப் பெரிது கோடியால் (கிளைகண்டு நீங்கு-106)

அந்த நற்பெருங் குரவ ராரெனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினால்
தந்தை தாயரென் றிவர்க டாமலால்
எந்தை கூறவே றெவரு மில்லையால்... (ஷை-107.)

அரணிய மடைந்த அண்ணனை யனுசனாகிய பரதன் சென்றழைக்க விராகவ னிளவலை நோக்கி, "தம்பி பரத! மிக்க கேள்வியும், குற்றமற்ற ஞானமும், ஒழுக்கமும், வினைகளின் மேன்மையும், தொழத்தக்க கடவுளும், சகலமும் பெரியோர்களே. அப்பெரியோர்கள் யாரென வாராயுமிடத்துத் தந்தையும் தாயுமே யன்றிப் பிறரொருவருமல்ல. ஆகையால் பெற்றோர் வார்த்தையை மீறலாகாதென்றனன்" என்பதாம்.

இதனால், "ஈன்றாரினென்ன கடவுளுமில்", "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றபடி, பெற்றோரைத் தெய்வமாக்கருதிப் பேணல் வேண்டுமென்பதும், அவர்களை யுதாசினம் பண்ணி வருத்தி "மாதா மனங் கலங்க மகேஸ்வரபூஜை" யென்றபடி, எத்துணைத் தானதருமங்களியற்றினும் பரம பாகவத சிகாமணியாக விளங்கினும் பயனில்லை யென்பதும் பெற்றாம்.

14. மாதவத் தொழுகலெம் மறைகள் யாவையும்
ஓதலெம் ஓதுவார்க் குதவ லாற்றலெம்
மூதெரி வளர்க்கிலெம் முறையி னீங்கினேம்
ஆதலி னந்தண ரேயு மாகிலேம்...... (ஆர-அகத்திய-14.)

தண்ட காரண்ய வாசிகளாகிய அந்தணர்கள் காகுத்தனிடம் வந்து "சீதாபதி! அரக்கரின் கொடுமையால் நாங்கள் தவஞ் செய்ய வியலாதவர் களானேம். வேதமோதலும் ஓதுவித்தலும் செய்கிலோம். காருகபத்யம், ஆகவனீயம், தக்ஷிணாக்கினி யென்னும் முத்தீவேள்வியு மியற்றகில்லோம். அதிகமாகச் சொல்வானேன்; எங்கள் ஒழுக்கமும் குன்றியதாகையால் நாங்கள் பிராம்மணர்களென்னும் பெயர்க்கு முரியராகோம்" என முறையிட்டனர். (எ-று) இச் செய்யுள் ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தலென்னும் அறு தொழிலாளராகிய அந்தணரியல்பை விளக்குகின்றது.

பிரம்ம ஞானமடைந்தோர் பிராம்மணர். வேதாந்தப் பொருளை மேற்கொண்டோரே அந்தணர். அருளுடையோரே அந்தணர். உபநயனம் என்பதற்குப் பிரம்ம தரிசனத்திற் குதவியாகிய ஞானக்கண் என்றும், அதைப்பெற்ற பின்னரே ஒருவனுக்கு பிராம்மணத்வ முண்டாவதன்றி அதற்கு முன் அவன் சூத்திரனுக்கொப்பாமென்றும், இருபிறப்பாளர் அல்லது துவிஜர் என்னும் பெயருடைமையே இதை வற்புறுத்துவதாமென்று முணர்க.

அந்த அணர்—வேதாந்தப் பொருளையே மேற்கொண்டோர்.
அம்தண் அர்—அழகிய குளிர்ந்த அருளை யுடையோர்.

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்" ... ... (குறள்.)

15. தக்க வின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்நெறி
புக்க வேலவ் விலங்கும்புத் தேளிரே. (கிட்கிந்தா-வாலிவதை-112.)

மிருகங்களாகிய எங்களிடத்தில் நல்லொழுக்க மிருக்குமோ? இராதாகலின் நீ என்னைக் கொன்றது குற்றமே யென்ற வாலியை நோக்கி தாசரதி கூறுவார். "நன்மை தீமைகளின் தன்மையை யாராய்ந்துணரு மறிவில்லாமையா லன்றோ, மிருகங்களுக்கும் மனிதருக்கும் பேத முண்டாயிற்று? இது செய்யத்தக்கது இது செய்யத்தகாதது என்றாராய்ந் துணரு மறிவிலராயின், அவர்கள் மானிடராயினும் மிருகங்களே; அவ்வறிவைப் பெற்றிருந்தால் மிருகங்களும் தேவர்களொப்ப வுயர்ந்தவையேயாம்." என்றார் (எ-று) ஆகையால் உயர்வாகிய மானிடப் பிறவியைப் பெற்ற நாம் அதற்கேற்றவாறு காரியா காரியங்களை யாராய்ந்து, விதி விலக்குகளின்படி விதிகளை மேற்கொண்டும், விலக்குகளை விலக்கியும் ஒழு

னால் மாத்திரம் மனிதரென்னும் மாண்புடைப் பெயர்க்கு அருக ராவோம். வெறும் உடலுருவால் உயர்ந்தோராகோம் என்பதை யுணர்ந்து ஒழுகுவோமாக.

(தொடரும்)

பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
இராணிப்பேட்டை.

ஜாதிபேதமும் தேசதிக்கும்

இந்தத் தென் இந்தியாவில் ஜாதிச் சண்டைக்கு எனக்கு ஒரு விசித்திரமான காரணம் தோன்றுகிறது. இந்தியா (Map) படத்தைப் பார்க்கும் போது வடபுறம் விசாலமாகவும், தென்புறம் குறுகியும் இருக்கின்றன. அதாவது மேலே போகப்போக விசாலமான நோக்கமும், கீழேவரவரநெருக்கமான பார்வையும் உண்டாகின்றன. அதுவுமன்றித் துருவனும், குபேரனும் வடதிக்கு அதிபதிகள்; ஆனால் இயமனும் தலைகீழ்நிற்கும் திருச்சங்கும் தென்திக்கு நாயகர்கள். அதுதான் அப்படி என்றால், நதிகளிலும் வடநாட்டுக் கங்காநதி ஜீவநதியாயும் (அதாவது எப்பொழுதும் ஓடுவதாயும்) பனிக்கட்டி கரைந்து கரைந்து நமக்கு அவசியம் தேவையான கோடை காலத்தில் வெள்ளம் வருவதாயும் இருக்கிறது; ஆனால் நம்முடைய தென்னாட்டுக் காவேரிநதி மழைக்காலத்தில் மாத்திரம் ஓடி அப்புறம் உலர்ந்து போகிறது. நம்முடைய தேசமிருக்கட்டும். அமெரிக்கா தேசத்திலும் 1861ஷ குடிகள் சண்டை செய்தபோதும் (Civil War) வடநாட்டார் எதேச்சை வேண்டுமென்றும், தென் தேசத்தார் அடிமைத் தேவையென்றும்தான் போர்புரிந்தார்கள். அதே மாதிரிதான் இப்பொழுதும் இவ்விடம் ஜாதிச்சண்டை ஆரம்பித்து பிராம்மண-அப்பிராம்மண விவாதம் நடந்து வருகிறது. ஆனால் இந்தக் கலியுகத்தில் கலகம்தான் பலமாகிக்கொண்டு வரும்போலிருக்கிறது. "கலி" என்றால் கலஹம் என்றே பொருள். உலக சகோதரத்வம் வாயில் பேசும் மேல் நாட்டாருக்கும் "வர்ண" ச்சண்டை (Colour-War) இருந்து கொண்டே இருக்கிறது. உதாரணமாக இந்தியர்கள் தென் ஆப்ரிகாவில் படும்பாடும் அமெரிக்காவில் நீக்ரோஜாதியார் (மேல்நாட்டுப் பஞ்சமர்கள்) அனுபவிக்கும் துன்பமும் பார்க்கலாம்.

உ. துரைசாமி ஐயர்,
வாலாஜா.

இருதயவியாதி அல்லது பித்தவாய்வு

(267-ம் பக்கத் தொடர்ச்சி.)

அது வாஸ்தவமே. ஏனெனில் கீழ் நாட்டார்கள் மேற்சொன்ன வியாதியைக் குணம் செய்துகொண்டு வந்தாலும், சரீர தத்துவப்பயிற்சியும் சரீரதத்துவங்களின் நிலைமைகளும் அவ்வவற்றின் தொழில்களும் இருப்பிடம் தெரிந்து கொள்ளாத கீழ்நாட்டு வயித்தியர்கள் பலருளர். ஆனால்

கைநாடியைப் பார்த்து வாதபித்த சிலேத்துமங்களில் ஏற்பட்டுள்ள வித்தியாசங்களைச் சொல்லி ஔடதம் கொடுத்து வருகின்றார்கள். அத்த கையவர்களுக்கு மேற்சொன்னதத்துவ உணர்ச்சியுமிருக்குமாகில் பொன் மலர் கந்தமுடையது போலாம். நமது இருதய மானது இரத்தத்தையும் காற்றையும் ஒருவழியில் உட்கொண்டு மீண்டும் அவ்வழியில் வரவிடாது எலிபிடிக்கும் போனைப்போல் அடைப்பதால், மறுவழியில்சென்ற இரத்த மானது காற்றின் சகாயத்தாலும் அவற்றின் பலத்தினாலும் சரீரத்தி லுள்ள சகல நரம்புகளுக்கும் சென்று சரீரத்தில் மேனியையும் பலத்தை யும் கொடுத்துக் கொண்டு வருகின்றது. இவற்றுள் காற்றின் சகாய மில்லாமல் இரத்தமானது சரீரத்தில் பரவும் தன்மை இல்லாமையால் எப்போதும் காற்று அவசியமா யிருக்கின்றது. இரத்தக்குறைவு நேர்ந்து காற்று அதிகப்படும் பட்சத்தில் இரத்தத்தோடு காற்றும் பரவிச் சரீரங்க ளில் வலியுண்டாகும்படிச் செய்யும். அப்படி யுண்டாகும் வலிகளையும் பல விதமாய்ப் பிரிக்கவேண்டி வரும். எப்படி யெனின், வாய்வுடன் சம்பந்தப் பட்டுச் செல்லும் இரத்தத்திலும் மேகம் என்னும் இந்திரியம் அதிக உஷ் ணத்தினால் கலந்து விடுமாகில் அதை மேகவாய்வு என்றும், இந்திரியம் கலக் காமல் காற்றுமாத்திரம் பரவுமாகில் உஷ்ணவாய்வு என்றும் அல்லது பித்த மும் கலக்கும்பட்சத்தில் பித்தவாய்வு என்றும் கூறப்படும். அவற்றின்பிரிவு அண்டவாய்வு என்றும், நீர்வாதம் என்றும் இன்னும் அனேக விதங்க ளாய்ப் பிரியும். எத்தனை விதங்களாய்ப் பிரிந்தாலும் அவைகள் யாவும் காற்றையே ஆதாரமாய்க்கொண்டிருக்கும். இவற்றுள் மேகவாய்வு என்பது அதிக உஷ்ணத்தினால் அதாவது பரஸ்திரீகளின் கெட்ட சகவாசத்தினால் சிறுநீர்த்துவார மூலமாய்ச் சிரசிற்கு விஷமேறி இரணமாய் அவ்விடமிருந்து இந்திரியமானது சதா கசிந்து சரீர முழுமைக்கும் பரவி இரத்தத்தையும் கெடுக்கும். அத்துடன் காற்றும் சேரும் பட்சத்தில் இதையே மேகவாய்வு என்றும் மேகப்பிடிப்பு என்றும் கீல்வாய்வு என்றும் சொல்லுவார்கள். இதைவிட வேறுவிதமாய் மேகவாய்வு உண்டாகாது. அப்படி யுண்டாகு மானால் அதை வேறு வியாதியாய்க் கொள்ளவேண்டும்.

(இன்னும்வரும்)

டாக்டர்-மே. மாசிலாமணிமுதலியார்.

வர்த்தகம்

நமது அன்பார்ந்த தைமாத ஆனந்தபோதினியின் தலையங்கத்தில் வர்த்தக விஷயமாக வெளிவந்த அநேக அரிய விஷயங்களை நமது இந்திய வர்த்தகர்கள் கவனித்திருப்பார்க ளென்று நம்புகின்றேன்.

வர்த்தக விர்த்திக்கு இன்னும் இரண்டொரு முக்கியமான விஷயங்க ளும் கவனிக்கவேண்டியவைகளா யிருக்கின்றன. அவை எவையெனில் இந்தியவர்த்தக சாலைக்குள் நுழையும்போது நமக்குக் கொடுக்கும் மரி

யாதை அக்கட்டிடத்தைவிட்டு வெளிவரும் வரைக்கும் இருப்பதுசந்தேகந் தான். ஏதாவதொருசாமான் வாங்கினுல் தப்பித்தோம், அல்லாவிட்டால் அவர்கள் பேசும் அவமரியாதையான வார்த்தைகளைச் செப்பத்தரமல்ல. பெரும்பாலும் குஜிலிக்கடைக்குள் இவ்வழக்கமதிகம். ஆனுல் மேல்நாட்டாரிடம் இக்கொடியவழக்கம் கிடையவே கிடையாது. அவர்கள் முதலிலிருந்து கடைசிவரைக்கும் காட்டும் மரியாதையோ நமது சொந்த இனத்தாரிடத்திலும் பெறமுடியாது. அவ்வளவு மரியாதை அவர்களிடம். இன்னெரு அரியகுணம் யாதெனில் எழுதிய கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் எழுதுவது. உதாரணமாக:—நான் ஐக்கியமலேய நாட்டில் இருந்தபோது சென்னையிலுள்ள பிரபலஜவுளி வர்த்தகர் ஒருவருக்கு 1 டஜன்வில் ஷர்ட்அனுப்பும்படியாகப் போஸ்டல் ஆர்டர் 5 ரூபாய்க்கு அனுப்பியிருந்தேன். 1 டஜன் ஷர்ட் அனுப்பினுர்களே யொழிய எனது ரூபாயில் எவ்வளவு மிச்சம் இருக்கிறதென்று எத்தனை காகிதம் எழுதினுலும் பதில் இல்லை. அவ்விடமிருந்தே மெஸ்ஸரஸ் ஹெக்கின்பாதம் அவர்களுக்கு ஓர் புத்தகம் அனுப்பும்படியாக போஸ்டல் ஆர்டர் ரூபாய் 8 க்கு அனுப்பியிருந்தேன். அவர்கள் உடனே புஸ்தகம் அனுப்பியதுடன் எனது ரூபாயில் மிச்சம் 6 பைக்கு ஸ்டாம்பு ஒன்று அவர்களுடைய பதிலில் அடக்கம் செய்து அனுப்பியிருந்தார்கள். இன்னம் நம் தமிழ்வர்த்தகர்களின் ஊழல் அநேகம் உண்டு. விரிக்கிற் பெருகுமென்று இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன். இதனுல் எவர்களிடம் வியாபாரம் செய்ய விருப்பமிருக்குமென்று நேயர்களே அறிந்துகொள்ளலாம். ஆகையால் மேல் நாட்டாரிடம் வர்த்தக விஷயத்திலுள்ள அநேக நற்பழக்கங்களை நாமும் கற்று அவர்களைப்போல் நாமும் பிரபல வியாபாரம் செய்ய எல்லாம் வல்ல ஈசன் கருணை புரிவாராக.

எம். எஸ். புருஷோத்தம நாயகர்.
சூளை-சென்னை.

குறிப்பு:—நமது வர்த்தகர் விஷயத்திலுள்ள மேற்படி குறைகளையெடுத்துக்காட்டிய நமது நண்பர்க்கு மிக்க வந்தன மளிக்கிறேம். நம் நாட்டு வர்த்தகர் மேல் நாட்டாரைப்போல் வெளிவிஷயங்களில் மட்டும் நடக்க முயல்கிறுர்களே யன்னியில் மேல்நாட்டாரிடமுள்ள நல்ல விஷயங்களைப் பின்பற்றுகிறுர்களில்லை. அவர்களைப்போல் கடிதங்களின் தலைப்பில் விலாசம் அச்சடித்துக் கொள்கிறுர்கள். ஆனுல், "விளம்பரவிகிதம் 5 ரூபாய். இதில் எக்காரணத்தாலும் குறைக்க அனுகூலப்படாது" என்று எழுதினுல் "நாங்கள் இன்னும் அனேக விளம்பரங்கள் அனுப்புவோம். ஆகையால் இதற்குமட்டும் தயவுசெய்து 4 ரூபா வைத்துக் கொள்ள வேண்டும்" என்று பதில் எழுதுவார்கள். வர்த்தகன் யாரிடத்திலும் அன்போடும் மரியாதையோடும், வந்தவன் மறுபடி தனது கடைக்கே வர விரும்புமாறு நடந்து கொள்ளவேண்டியது முதற்கடமை யென்பதை யவர்கள் கவனிப்பதில்லை. சிலரிடம் இன்னெரு கெட்டவழக்கமுமுண்டு. அதாவது ஒரே

பொருளை யொருவனுக்கு நான்கு ரூபாய்க்கும் பத்துநிமிடங் கழித்து அதேமாதிரிப் பொருளை மற்றொருவனுக்கு மூன்று ரூபா அல்லது ஐந்து ரூபாய்க்கும் விற்பார்கள். உள்ளூரானுக்கு ஒருவிலை, உளவறியா வெளியூரானுக்கு ஒரு விலையாக விற்பார்கள். நமது நாட்டுவர்த்தகர் முன்னே குறைகளை நீக்கிக்கொள்வார்களாயின் மிக்க நலமாகும்.

பத்திரிகாசிரியர்.

ஹிந்து மதத்தைத் தழுவினர்

"மிஸ் எஸ்தர்ஹௌல்டன் என்ற 18 வயதுள்ள கிறிஸ்தவமாது தனது மதத்தைத்துறந்து ஹிந்து மதத்தைத் தழுவி யிருக்கிறார். இராஜகுமாரி தேவி பெயருடன் விளங்குகிறார். ஜனவரிமீ 2உ பம்பாய் ஹிந்துமதப் பிரசாரசங்கத்தினர் ஆதரவிலேயே மேற்படி மாது ஹிந்துமதத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறார்." என்று 6-1-23-ல் வெளியான "ஹிந்து" முதலிய பத்திரிகைகளில் கண்டோம்.

மேற்கண்ட மாது போன்றவர்கள் தம்மதத்தையும் பிறமதங்களையும் ஆராய்ச்சிசெய்தே அவ்வாறு நடந்து கொள்கிறவர்கள். அனுபவமா யறியக்கூடிய மோக்ஷமார்க்கத்தைக் கண்டறிய வேண்டுமென்று ஆராய்ச்சி செய்த வேறு பல ஐரோபிய கிறிஸ்தவர்கள் கூட ஹிந்துமதத்தைத் தழுவிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குச் சாதாரணமாக இவர்கள் மதக்கல்வி சிறுவயது முதலே கற்பிக்கப்பட் டிருக்கிறது. இவர்கள் அன்னியர் தூண்டுதலால் தம் மதத்தைவிட்டுப் புறச்சமயம் புகுபவரல்ல;அல்லது எவ்வித உலகபோக இச்சைவைத்தாவது வேறு சௌகரியங்கள், உதவிகள் இவற்றைப்பெற வெண்ணியாவது வருபவருமல்ல. மேலும் நாம் அன்னிய மதத்தவரை வலிய அழைப்பதில்லை. அவர்களே வலியவந்து நமது மதத்திலுள்ள ஞானமார்க்கத்தைப் போதிக்கும்படி கேட்டுக் கொண்டால், அப்போதும் அவர்களது அறிவின் தரத்தைச் சோதித்தே நம்மவர்கள் போதிப்பார்கள்.

அன்னிய மதஸ்தர் உண்மையறிந்து இவ்வாறு நடக்கும்போது நமது மதத்தவர் சுயமத ஆராய்ச்சி சற்றுமின்றி அற்பமாகிய உலக சுகங்களின் ஆசையால் மயக்கப்பட்டு வீணே புறமதத்தில் வீழ்ந்தழிவது என்ன மதியோ; மதத்தைப் பாதுகாக்கவும் பரவச்செய்யவு மென்றே ஏற்பட்டுள்ள மடாதிபதிகள் மதாசாரியர்கள் இவ்விஷயத்தில் இன்னும் பராமுகமாக விருப்பது பெருந் தவறேயாகும்.

பத்திரிகாசிரியர்.

சிவஞானபோத சூத்திரம்.

இது சந்தானசாரியருள் ஒருவராயமெய்கண்ட தேவரால் அருளிச்செய்யப் பட்ட தோர் சைவசித்தாந்த செந்தமிழ்நூல். இதன் அருமைபெருமைகளை அறியாத சைவசமயத்தவர்கள் மிகவுஞ் சிலரே. தமிழ்த் தெய்வநூலாகிய திருக்குறளினுஞ் சுருக்கமான நூல் யாதோவெனில், அதுவே

சிவஞான போதமென்னும் அருமைச் செந்தமிழ் ஞான நூலாகும். இது
பன்னிரண்டு சூத்திரங்களுடையது; பன்னிரண்டு சூத்திரங்களும் நாற்
பத்தோரடிகளும் இருநூற்றுப்பதினுறு சொற்களுமுடையன. இவ்விரு
நூற்றுப்பத்தினுறு சொற்களும் அறுநூற்று இருபத்தி நான்கு எழுதுக்கள்
உடையனவாம். பன்னிரண்டு சூத்திரங்களினுலாய சிவஞான போதம்
இருபத்தெட்டாகமங்களில் ஓர் படலத்தினின்றும் மொழி பெயர்க்கப்
பட்டதெனப் பெரும்பாலும் கூறப்படுகிறது. தமிழில் முதநூலாகவுள்
ளது சிவஞான போதம். இதனையே பின்னுள்ளார் மொழி பெயர்த்து
எழுதி இரௌரவ ஆகமத்திற் சேர்த்துக் கொண்டார்கள் என ஒரு சிலர்
மொழிகின்றனர். தனக்கொப்புவமை யில்லாததோர் பாஷியம் சிவஞான
போதத்துக்கு அருளிய மாதவச் சிவஞான யோகிகளும் பின்னுள்ளாரும்
கூறும் உரைப் பிரமாணங்களால் அது வடமொழியிலிருந்து நேரேதமி
ழிற் கொண்டுவரப்பட்ட நூலேயெனக் கூறல் சால்புடைத்தென முன்னை
யவர் கூறு நிற்பர். மற்றையர் "தொன்று தோன்றிய யாவவை தூயன-
வின்று தோன்றிய யாவவை தீயன - வென்றியம்பு மியல் புண ராமக-
னன்றிமூதறி வாளரறைவரோ?" என்றும், "எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினு மப்பொருண்—மெய்ப்பொருள் காண்ப தறிவு" எனவுங்கூறி
இவற்றின் உண்மையினை ஆராய்ந்து முடிவுகட்டப் புகுந்தனர். நடுநிலை
குன்றாது நடுநின்றாராயும் ஒருவருக்கு இவற்றில் உண்மை யாதென வறி
தல் இலகுவில்லமையும். தமிழிலே எழுதப்பட்ட தொன்மையான நூல்களை
யும் பிறவற்றையும் தமிழபிமான மற்றார் தாம் ஆரியமொழியிற் கொண்ட
தோர் பற்றுக் கோட்டினுல் ஆரியத்திலிருந்தும் மொழி பெயர்க்கப்பட்ட
தெனக் கூறிவருவோராயினர். உண்மையில் மொழிபெயர்ப்பு நூல்களல்
லாத தமிழ் நூல்கள் பல, காலகதியில் மொழி பெயர்ப்பு நூல்களாகவே
மதிக்கப்படலாயின. தமிழிலே எத்தனைச் சிறந்த நூல்களைக் காணினும்
அவை இதிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டன, அதிலிருந்து மொழி
பெயர்க்கப்பட்டன எனக் கூறுங்கொள்கை பலரிடத்திருந்து வந்தது.
இங்ஙனமே நமது பெருந்தகையாகிய மெய்கண்ட தேவர் தமது ஞானு
னுபூதி முதிர்ச்சியால்தமிழுலகுய்யுமாறு தமிழில் முதல் நூலாக அருளிச்
செய்த ஞானச்செந்தமிழ் நூலாம் சிவஞான போதத்தையும் மொழி
பெயர்ப்பு நூலெனத் தம் மனம்போனவாறு கூறத்தலைப்பட்டனர். அங்
ஙனம் கூறுவர் தாம் கூறுங் கூற்றினை வலியுறுத்த வேண்டும்என்பதற்காக
இத்தமிழ்நூலை வடமொழியி லெழுதித் தம் நூல்களுட் சொருகிக் கொண்
டனர். ஆரியப்பிரவாகம் தெற்கே பெருக்கெடுத்து எங்கும் அலைபுரண்ட
அக்காலந்தொட்டே வடமொழி பயிலாவிடின் மோட்ச மடைவது அசாத்
தியம் என்னும் கொள்கையுந் தலையெடுக்கலாயிற்று. இதனுல் வட
மொழிக்கு எவ்வளவு உயர் வினைவுகற்பிக்கினும் ஆட்சேபமின்றி அங்கீ
கரிப்பது பெரும்பாலும் சகசமாயிருந்தது. இவற்றால் சிவஞான போதம்
வடமொழியினின்றும் மொழி பெயர்க்கப்பட்டதென நாட்டுதல் கடின
மாக இருக்கவில்லை.

மெய்கண்ட தேவர் தமது நூலை மொழி பெயர்த்தார் எனக் கூறுவதற்கேற்ற பிரமாணம் எவ்விடத்துங் காணப்படவில்லை. சந்தான நூல் மரபும், சந்தான மரபுங்கூறிய உமாபதி சிவனர் அருணந்தி சிவனர் முதலியோர் வாக்கியங்களை எழுத்தெழுத்தாகப் படித்துப் பார்ப்பினும் சிவ ஞான போதம் மொழி பெயர்ப்பு நூல் எனப் பொருள்கொள்ளத்தக்க வாக்கியங்கள் காண்டலரிது. பரஞ்சோதி முனிவர் திருக்கயிலாயமலையிலிருந்து வந்தமையால் அவர் வடமொழியிற்றான் உபதேசஞ்செய்தார் எனச்சிலர் கருதுகின்றனர். திருக்கயிலாயத்திலே சேரமான் பெருமான் நாயனர் தமது பொன்வண்ணத் தந்தாதியை அரங்கேற்றினர். கயிலாயத்திலே தமிழ் வளர்க்கப்பட்டு வந்தது. ஆதலின் ஆண்டுவைகும் முனிவருக்குத் தமிழறிவில்லை எனக் கருதல் வெறும் மடமையாகும். பேசும் மொழியை ஒழித்துப் பேசாத வடமொழியில் முனிவரர் உபதேசித்தார் எனக்கோடலும் அசம்பாவிதமே யாகும். நிற்க நமது அருட் பெருந்தகையார் பிறிதோர் நூலின் ஒரு பகுதியை மொழி பெயர்த்தார் எனக்கூறுதல் அவர் பெருந்தகமைக் கிழுக்காம். ஓர் நூலிலுள்ளவற்றை மொழிபெயர்ப்பதற்காகவா? நம் பெருந்தகைபோல்வார் திருவவதாரஞ் செய்தல் வேண்டும்!

சிவஞான போதம் பிறபாடையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டதல்ல. அது தமிழிலே முதல் நூலாக மெய்கண்டதேவரால் அருளிச் செய்யப்பட்டது. இதனைப் பிற்காலத்தில் தமிழ் ஆரியப்பயிற்சியுள்ளார் அதன் அருமையை நோக்கி வடமொழிப் படுத்தினர்.

வடமொழிச் சிவஞானபோத சூத்திரங்கள் தமிழின் மொழி பெயர்ப்பென்பதை விளக்குவதற்கு ஸ்ரீமான் T. பொன்னம்பலப் பிள்ளையவர்கள் சைவமகா சங்கத்திற்செய்த பிரசங்கமொன்றில் வடமொழிச் சூத்திரங்களையும் தமிழ்ச் சூத்திரங்களையும் எடுத்துக் காட்டி வடமொழிச் சூத்திரங்கள் பொருட் குறைவுடையனவா யிருத்தலை நன்கு தெவிட்டி யிருக்கிறார்கள். இன்னும் பன்னிரண்டாவது சூத்திரத்தால் அதே பிறமொழியினின்றும் மொழி பெயர்க்கப் பட்டதெனப் படிப்பார் அறியுமாறு இருத்தலை விளங்கக் காட்டியிருக்கிறார். (அவற்றை யெல்லாம் 'சைவ மகாசங்கக் கட்டுரைப்பகுதி 3 ல் பார்த்தறியவும்.)—(தமிழகம்.)

பகவத்கீதை வசனம்.

(273-ம் பக்கத் தொடர்ச்சி.)

5-வது ஞானகர்ம அத்தியாயம்

[3-ம், 4-ம் அத்தியாயங்களால் பகவான் கர்மம், ஞானம் இவ்விரண்டையும் நிருபித்தார். 5-ம், 6-ம் அத்தியாயங்களால் கர்மத்தையும், சகல கர்மத்தியாக ரூபமான சந்நியாசத்தையும் நிருபிக்கிறார். 4-ம் அத்தியாயத்தினந்தத்தில் சகல கர்மேந்தனங்களையும் ஆன்மஞானமாகிய அக்னிதகித்து

நாசமாக்கு மென்றும், அதுவே யாவற்றிலும் சிரேஷ்டமென்றும் கூறி, ஆன்மஞானத்தால் உன்னிடத்துள்ள சகல சந்தேகங்களையும் ஒழித்து உனது தருமமான யுத்தத்தைச் செய்தி என்று கர்மாநுஷ்டானத்தையும் பகவான் அர்ச்சுனனுக்கு உபதேசித்தருளினார். சகல கர்மத்தியாக ரூபமான ஞானமும், கர்மாநுஷ்டானமும் பரஸ்பர விரோதிகளாதலின், இரண்டையும் ஒருவன் எவ்வாறு அநுஷ்டிப்பதென்னும் கலக்கத்தால், இரண்டில் தனக்கு அவசியமான தெதுவென்று அர்ச்சுனன் சங்கிக்க பகவான் விரக்தி, விரக்தியின்மை யென்ற காலபேதத்திற்குத் தக்கபடி ஒருவனே இரண்டையும் அநுஷ்டிக்க வேண்டுமென்று அருளிச் செய்கிறார்.]

பகவான் அருளிய வார்த்தையைச் செவியேற்ற பார்த்தன் அவர் கருத்தை யறியாது பின்வருமாறு வினவுகிறான்:—

"பகவான்! கருமாநுஷ்டானமே சிரேஷ்டமென்று உபதேசித்தீர். பிறகு சந்நியாசமே மிகச் சிறந்ததென்று கூறினீர். இதனால் எனக்குச் சமுசய முண்டாகிறது. ஆதலின் அடியேனது சம்சார துக்கம் ஒழியுமாறு இவை இரண்டனுள் அடியேன் அநுஷ்டிக்க வேண்டியது இன்னதென்று உபதேசித்தருள வேண்டுகிறேன்" என்றான்.

பகவான்:—"ஏ பார்த்த! சாத்திரத்தில் கூறியுள்ளபடி சர்வ கருமங்களின் தியாகவடிவம் சந்நியாசமாம். தத்தமக்குரிய வருணாசிரம தருமத்தின் கடமைகளைச் சரியாய் அநுஷ்டித்தல் கருமயோகமாம். இவ்விரண்டும் ஆன்மஞானத்தை யளிக்கக் காரணமா யுள்ளவையே. இவற்றில் அந்தக்கரண சுத்தியுடையவனே சந்நியாசத்திற் கதிகாரியாகும். அந்தக்கரண சுத்தியில்லாதவனாற் கொள்ளப்பட்ட சந்நியாசத்தைக் காட்டிலும் கருமயோகமே சிரேஷ்டமாம். அசுத்த அந்தக்கரண முடையவனது சந்நியாசத்தால் ஆன்மஞானம் சித்திக்காது. ஆனால் அவன் நிஷ்காம கர்மயோகத்தைச் செய்யின் சித்த சுத்தியுண்டாகி அதன் வாயிலாக ஆன்ம ஞானத்தை யடைவன். இக்காரணத்தால் சந்நியாசத்தினும் கர்மயோகமே சிரேஷ்டமாம்.

(பகவான் நிஷ்காம கருமயோகத்தின் சிறப்பைக் கூறுகிறார்.)

ஏ அருச்சுன! எவனிடத்தில் இலாபத்தில் இச்சையும் நஷ்டத்தில் வெறுப்பும் இல்லையோ, எவனிடம் இராகத் துவேஷாதிகள் இல்லையோ, அத்தகைய நிஷ்காம கருமயோகிகள் சந்நியாசத்தில் நிற்பவரே யாவர். விருப்பு வெறுப்பையும் இராகத் துவேஷங்களையும் உடையோர் கர்மங்களைத் தியாகம் செய்வதாகிய சந்நியாசத்திலிருந்தாலும் துக்கமயமான பந்தத்தில் நிற்பவரே யாவர்.

சந்நியாசம், கர்மயோகம் என்ற இரண்டனுள் தமது அதிகாரத்திற்கு ஏற்ற ஒன்றைச் சாத்திரோக்தமாய் விதிப்படி யநுஷ்டிப்போர் அவையிரண்டினாலும் அடையத்தக்க மோக்ஷபலத்தை அடையா நிற்பர். சாத்

திர விசாரமுடைய அறிவாளிகள் இவை யிரண்டும் ஒன்றே யென்றுணர்வார்கள். இவை யிரண்டும் வெவ்வேறு பலனையுடையவை யென்று கருதுவோர் இவையிரண்டையும் உணர்ந்தவரல்லர்.

பகவான் அருளிய இம்மொழிகளைக்கேட்ட அர்ச்சுனன், "ஏ பரந்தாமா! சுத்த அந்தக்கரணமுடைய புருடனும் ஆன்ம ஞானத்தைப்பெறச் சந்நியாசம் என்ற சாங்கிய நெறியில் நிற்கவேண்டும் என்பதால் ஞானத்திற்குச் சந்நியாசம் அத்தியாவசியம் என்று தெரிகிறது. ஆதலின் ஞானத்தையடைய சுத்த அந்தக்கரணமுடைய புருடன் சந்நியாசத்தைக்கொள்வதுபோல், அசுத்த அந்தக்கரணமுடைய புருடனும் முதலிலே அச்சந்நியாசத்தையே செய்யலாமன்றோ?" எனவினவினான்.

பகவான்.—"ஏ பார்த்த! சித்தசுத்தி யில்லாதவன் செய்யும் சந்நியாசம் ஞானத்தை யொருபோது மளிக்காது. அது துக்கப்பிராப்தியையே தரும். ஆதலின் சித்த சுத்தி யளிப்பதாகிய நிஷ்காம கருமயோகத்தை முதலில் செய்து, அதாவது சித்த சுத்தி யுண்டானபின் சந்நியாசத்தை யடைந்து யாவரும் என்னை யடைவர். இதுவே சிறந்த மார்க்கமாம். இச்சம்சாரதசையில் நினைத்தற்கரிதான மோக்ஷத்தைப் பெறுதற்கு நிஷ்காம கருமயோகத்தை யன்றி வேறு மார்க்கமில்லை.

[பகவான் கூறி யருளிய சந்நியாசம் கருமயோகம் என்ற இரண்டின் விவரத்தாலும், கீழ்க்கண்ட உண்மை நன்கு விளங்குகிறது. அதாவது:—துறவில் அகத்துறவே முக்கியமாய் வேண்டியதென்றும், அகத்துறவின்றிய புறத்துறவாகிய சந்நியாசத்தால் ஒரு பயனுமில்லை யென்றும் அறியலாம். நிஷ்காமகருமத்தால் சித்த சுத்தியாகிய அகத்துறவு உண்டாகிறது. மனப்பற்றொழியாமல் பெண்டு பிள்ளையாதியை மட்டும் விட்டு வெளிச்செல்வது பயனற்றதேயாகும். சித்தசுத்தியடைந்தவன் அதாவது சுகதுக்காதிகளில் விருப்பு வெறுப்பும், இச்சை, இராகத் துவேஷாதிகளும் ஒழித்தவன்றான் சகல கர்மத்தியாக ரூபமான சந்நியாசத்துக்கு அதிகாரியாகும். அவன் நிட்டையில் ஆத்மஞானமடைய யோக்கியதையுடையவன். மற்றையரெல்லாம் நிஷ்காமகர்மத்தால் சித்தசுத்தியடைந்து அத்துவாரா ஞானமடைவதே தகுதியென்பதாம்.]

அர்ச்சுனன் பகவானை நோக்கி "பகவான்! ஜனங்கள் கர்மத்தால் பந்தப்படுத்தப்பட்டு ஜனனமரணங்களையடைகிறார்கள் என்று கூறப்பட்டிருக்கும்போது, கருமயோகத்தோடு கூடிய புருடன் பிரம்மசாக்ஷாத்காரத்தை யடைவான் என்று தாங்கள் அருளியது அசங்கதமாகப் புலப்படுகிறதே" என்றான்.

பகவான் :—ஏ பார்த்த! பலத்தை இச்சிக்காமல் கருமங்களைச் செய்வதாகிய கர்மயோகத்தால் ரஜோதமோகுணங்கள் நீங்கிய மனமுடையவனும், மயக்கத்தைத் தருவதாகிய இந்திரியங்களைச் செயித்தவனும், ஆன்ம சாக்ஷாத்காரமடைந்த ஞானிகளும் அந்நியர்க்குப் பந்தத்தைத்

தரத்தக்க கர்மங்களைச் செய்யினும் அக்கர்மங்கள் அவர்களைப் பந்தப் படுத்தா.

[ஈண்டு இரஜோதமோகுணங்கள் ஒழிந்த மனம் என்பது சத்துவ குணமாகச் சேஷித்த மனமாகும். இதற்கு மனோதண்டம் என்று பொருள். இவ்வாறே இந்திரியாதிகளை யடக்கும் வாக்குத்தண்டம், தேகச் செயல்களை யடக்கும் காயதண்டம், இந்த மூன்றையும் உடையவனே சந்நியாசியாகும். இதே திரிதண்ட சந்நியாசம் என்று கூறப்படுவது.]

பகவான் மேலே கூறப்பட்டவர்கள் செய்யும் கர்மங்கள் அவர்களைப் பற்றுவதில்லை யென்பதை யின்னும் விரிவாய்க் கூறுகிறார்:—

ஏ பார்த்த! நிஷ்காமகர்மத்தைச் செய்து மேற்கண்ட குணங்களை யடைந்தோன் கண்ணால் பார்ப்பதும், காதால் கேட்பதும், வாயால் பேசுவதும், மூக்கால் முகர்வதும், காலால் நடப்பதும், உண்பதும், உறங்குவதும் ஆகிய பல கர்மங்களைச் செய்யினும் அவை யாவும் இந்திரிய கரணங்களின் செயலே என்றும் ஆன்மாவாகிய தன்னிடம் ஒரு கர்மமுமில்லை யென்றும், தான் கர்த்தாவுமல்ல போக்தாவுமல்ல (கர்மத்தைச் செய்பவனுமல்ல, போகத்தைப் புசிப்பவனுமல்ல) வென்றும் திடமான பிரக்ஞையுடையவனாக விருப்பான். அத்தகையோன் மலையைப் போன்றும் ஸ்தம்பத்தைப்போன்றும் ஒன்றாலும் சலனமடையான்.

(கர்மங்களில் பிரவேசிக்கும் அஞ்ஞானி கர்மத்தியாகம் செய்யும் சந்நியாசத்தாலடையத்தக்க ஞானநிஷ்டையை யெப்படியடைவான்? கர்மங்களைச் செய்துகொண்டே அவை பற்றாவண்ணம் எப்படி நடப்பான்? என்ற அர்ச்சுனனது சங்கைக்குப் பகவான் பதிலருளுகிறார்.)

ஏ பார்த்த! எவன் எத்தகைய சுவர்க்காதி போகபலனையும் இச்சிக்காமல், நான் ஆண்டவனது திருப்தியின்பொருட்டே செய்கிறேன் என்று சகல கர்மங்களையும் செய்கிறானோ, அப்புருடன் ஞானியைப்போல் அக்கருமங்களால் பந்திக்கப்படுவதில்லை. எப்படித் தாமரை யிலையின்மேல் தண்ணீர் இருந்தாலும் அந்த நீர் இலையில் பற்றுவதில்லையோ, அவ்வாறே ஒருவன் ஈசுரார்ப்பணமாய்ச் செய்யும் கர்மம் அவனைப் பற்றாது. அக்கருமம் அவனுக்குச் சித்தசுத்தியையே தரும்.

(இவற்றால் கருமம் ஒன்றே பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் இரண்டிற்கும் காரணமாகவல்லவோ விருக்கிறது என்ற அர்ச்சுனனது சங்கைக்குப் பகவான் கூறுகிறார்.)

ஏ பார்த்த! அது கர்மத்தைச் செய்பவனது அதிகாரத்தன்மையைப் பொருத்ததாக விருக்கிறது. யாதொரு பலத்தையும் இச்சியாமல் நான் ஈசுவரன் பொருட்டாகவே இக்கர்மங்களைச் செய்கிறேன் என்ற திட சித்தத்தோடு ஒருவன் கர்மங்களைச் செய்யும்போது அவை அவனுக்குப் பந்தத்தை யுண்டாக்காமல் சித்தசுத்தியையுண்டாக்கி அத்துவாரா ஆன்மஞானத்தால் மோக்ஷத்தையடையக் காரணமாகும். அப்படிக்கின்றி

ஒருவன் சுவர்க்கம் முதலிய போகபலன்களை யடையவேண்டு மென்கிற எண்ணத்தோடு கர்மங்களைச் செய்யும்போது அக்கர்மங்கள் அவனுக்குப் பந்தத்தையுண்டாக்கி ஜனனமரண துக்கத்தை யளிக்கக் காரணமாகின்றன.

(இதுகாறும் அசுத்த அந்தக்கரணமுடையவனுக்குச் சந்நியாசம் பயனளிக்காதென்றும் அவனுக்கு நிஷ்காம கர்மமே சிரேஷ்டமானதென்றும் விரிவாய் விளக்கிக் கூறி இனி, சித்தசுத்தி யுடைய புருடனுக்குச் சகல கர்மங்களின் தியாகவடிவ சந்நியாசமே சிறந்ததாம் என்பதைப்பற்றி அருளிச் செய்கிறார்.)

ஏ! கிரீடி! சித்தசுத்தியுடைய புருடன் ஆன்ம சாக்ஷாத்கார மடைவதால் சகல கருமங்களையும் அவற்றாலடையும் பலன்களையும் பரித்தியாகம் செய்து, நவத்துவாரங்களையுடைய இத்தேகத்தின்கண்ணே எவ்விதத் துக்கமுமின்றி ஆனந்த வடிவமாகவே யிருப்பன். அவன் பிராரப்தவசத்தால் நிகழ்காலத்தில் எதிரில் வந்தடையும் எக்கருமத்தையேனும் செய்பவனும் செய்விப்பவனும் ஆவதில்லை.

(அவன் ஆன்மசொரூபமா யிருப்பதாகிய ஜீவன் முத்த நிலையிலிருப்பவனாதலால், அவன் சாக்ஷிமாத்திரமாகவிருப்பவன்; அவனிடம் செய்கையும் செய்விக்கையுமில்லை. ஸ்காந்தமலைமுன் இரும்புத்துண்டுகள் சேட்டித்தாலும் அம்மலையசைவற்றிருப்பதுபோல், பிராரப்தத்தின்படி கருமங்கள் அவன் முன் நிகழினும் அவன் எதிலும் தாக்கற்று நிற்பான் என்பதே பகவான் கூறியது. அத்தகையோன் அசுத்த மலபாண்டமாகிய இத்தேகத்திலிருப்பினும் ஆனந்த வடிவமாகவே யிருப்பான்.

" செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்குங் காந்தச்
சிலைமலைமுன் னிரும்புகள் சேட்டிக்கு மாபோல்
செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்கு மென்முன்
செடமான வுலகமெலாஞ் சேட்டை செய்யும்
மெய்கலந்த விந்திரிய விகார ரூப
விவகார விருத்திக்கும் விருத்தி தானு
மெய்கலந்த சமாதிக்குஞ் சாட்சி யேநான்
வெயில்போலென் றுறைத்தவனே விபுமா கர்த்தன் "

என்றும்,

" அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பராமுக மாகினு லம்மட்டும்
நிசத்தி லுள்விழிப் பார்வையா மிப்படி நிரந்தரப் பழக்கத்தால்
வசத்தி லுன்மன நின்றுசின் மாத்திர வடிவமா யிடின்மைந்தா
சசத்த தேகத்தி லிருக்கினு மானந்தக் கடல்வடி வாவாயே "

என்றும், (கைவல்லிய நவநீதம்.)

(தொடரும்)

சீடன்.

இல்லறம்—கன்மம்.

(270-ம் பக்கத் தொடர்ச்சி.)

கடவுளின் கருணையைப் பெற்றுச் சிறந்த பெரியோரும் கன்மத்தை விடாமற் செய்து வருவதனுல் அதன் உண்மை விளங்கும். யோக முதலிய விருந்தாலும் அவைகளும் கன்மத்தின் றுணையின்றி நடவா. ஆதலாற் சித்த சுத்திக்குக் கன்மமே சிறந்தது. அந்தக் கன்மங்களின் உண்மையைக் கடவுள் ஒருவரே யறிவார். ஏனையோர் அறியமாட்டார்கள். தவமகிமை யாற் கடவுளைப்போன்ற நிர்மலராயுள்ள பெரியோர்கள் அதனுண்மை யைச் சிறிது வெளியிட்டு அதை அனுஷ்டித்தே தீரவேண்டும் என்று கூறி யுள்ளார். உண்மை யுணரும் பேரறிவில்லாத யாம் அவ்வழிபற்றி நடப் பதே யுசிதமாம். கடவுளின் கருணையைப் பெறுவதற்குக் கன்மத்தை யன்றி வேறென்றுமில்லை. ஆதலாற் கன்மமே எல்லாவற்றினும் சிறந் தது. யோகத்திற்குரிய எட்டு அங்கங்களுள் இரண்டாவது அங்கமாகிய நியமத்துள் கன்மம் அடங்கும். ஆதலால் யோகத்துக்கும் கன்மமே ஜீவா தாரமாமென்க. இதுபற்றியே கண்ணனும் கீதையில் "ஜனகன் முதலிய யோகிகள் கன்மத்தாற் பெருமை பெற்றனர்" என்று கன்மத்தைப் புகழ் ந்து கூறினர். "ஏ பார்த்தா! நான் பெறவேண்டியது யாதுமில்லை. ஆயி னும் நான் கன்மத்திலேயே யிருக்கிறேன். உலக க்ஷேமத்தை நோக்கி நீ கன்மத்தை விடாமற்செய்யக்கடவாய்" என்று கூறிக் கன்மமின்றியமையா ததென முடித்தார். அவ்வாறே வேதமும் "கன்மத்தைச் செய்துகொண்டு இவ்வுலகில் ஒருநூறு வருஷம் இருக்கக்கருது" என்று கட்டளை யிட்டது. ஆதலால் கடவுளின் கருணையைப்பெறக் கூடிய பற்பல வழிகளுள் கன் மமே சிறந்தது. அதுவே யோக முதலியவற்றிற்கும் உயிர் நிலையாம் என்று கொள்க.

இனிக் கன்மங்களால் ஜீவர்களை நிர்ப்பந்திப்பதனுற் பயன்யாது? என்பது ஓர் கேள்வி. இக்கேள்வியி னுட்கருத்து யாதெனின், இக் கன்மம் அநாதியான கடவுளின் கட்டளையாயின் அதைச் செய்யாதொழிந் தால் கடவுள் கோபிப்பாரென்பதும் உண்மையாம். இவ்விதமான கொடுமையான வழியைக் காட்டி யதைச் செய்யுத் தவறினுல் அந்தச் சீவ னைக் கொடுமையாகத் தண்டிக்கும் கடவுளும் கொடியவரே யாவார். இன்றேல் சுலபமான ஒரு வழியைக் காட்டி யதனுல் அநாதி கன்மத்தை யொழித்து முத்தியின்பத்தை ஏனளிக்கக்கூடாது என்பதாம்.

கடவுளின் அன்பை யடைவதற்கு வேறு வழியில்லையா என்ற வினு வுக்குப் பதில்கூறிய வதனுலேயே இதற்கும் விடை யளித்ததாகும். ஆயினுமிங்கும் சிறிது கூறுவாம். கடவுளே ஜீவனைக் கன்மத்தாற் பந்தித் தார் என்பது அறியாமையேயாம். ஜீவர்களே கன்ம வலையிற் சிக்குண்டார் கள். அதனுல் அளவற்ற துன்பத்தை யனுபவிக்கின்றூர்கள். கருணையே சொருபமாகக் கொண்ட கடவுள் அதை விலக்கிச் சீவர்களை யிரட்சிப்

பதற்குரிய ஒரு வழியைக் காட்டினார். இது கருணையாற் செய்ததேயன்றிக் கோபத்தால் தண்டிப்பதற்கல்ல. இது உஷ்ணம் உஷ்ணத்தாலொழியும் என்பது போலக் கன்ம பந்தத்தைக் கன்மத்தாலேயே யொழிக்க வேண்டும். செம்பினிடத்தில் அநாதியா யியற்கையில் அமைந்த களிம்பை புளி எலுமிச்சம்பழம் முதலியவற்றாற் சிறிது போக்குவதுபோலாம். இவ்வாறு ஒழிக்கப்பட்ட களிம்பு மறுபடியும் ஊறி மேலிடுவது போல அநாதி கன்மம் மேலும் விளையும். தக்க மூலிகைச் சாற்றை யச்செம்பிலிட்டுப் புடம் போட்டால் களிம்பு முற்று மொழிந்து பொன்னாவது போலச் சிவ பூஜை முதலிய பெருங் கன்மத்தால் சரீரத்தை வாட்ட அநாதி மல வாசனை யொழிந்து அந்தச் சீவன் சிவத்தையே யடையும். களிம்பற்ற செம்பு பொன்னாவது போல மல வாசனை யற்ற ஜீவன் கடவுளின் பேராற்றலில் அடங்கி நிற்பான். ஆதலாற் கன்மம் துன்பத்தைச் செய்வதென்று பெரியோர் கருதுவதில்லை. இன்பத்துக்கே காரணமாமென்று கருதுவார்கள். அநாதியிற் செம்பில் களிம்பு பற்றியதுபோல அநாதியிலே ஜீவனை யடைந்த கன்மத்தாலன்றி மற்றெதனாலுந்தீராதென்க. ஆதலாற் கன்மத்தைக் கைவிடாமற் செய்வதே யறிவுடைமையாம் என்பது ஆன்றோர் கொள்கையாகும்.

இது அநாதியோ என்பது ஒரு கேள்வி. இதனுட்கருத்து யாதெனில், அது அநாதி வஸ்துவானால் அழிதலில்லை. அழிதலுளதாயின் அப்போது அநாதியாகாது. அங்ஙனமிருக்க அது அநாதியாயுள்ளதென்பதும், பிரம ஞானத்தாலழியுமென்பதும் ஒவ்வத்தக்க தன்றாமெனின், முன்னரே விருக்ஷத்தையும் விதையையும் திருஷ்டாந்தங்காட்டி இதற்கு விடையளித்திருக்கிறோம். வித்தும் முளையும் போலக் கன்மமும் ஆன்மாவும் அநாதி வஸ்துவேயாம். அது பற்றியே ஆன்றோர்கள் "ஜக ஜீவ பரம்" என்றும், "பதி பசு பாசம்" என்றும், சித், அசித், ஈசுவரன் என்றும் கூறி திரிபதார்த்தமே அநாதி வஸ்துவென்று விதந்து கூறினார்கள். நூல்களுங் கூறுகின்றன. ஜகம், பாசம், அசித் என்பன கன்மத்தைக் குறிக்கும். அது பற்றியே ஆணவமலம், கன்மமலம், மாயாமலம் என்று சைவசித்தாந்தம் விரித்துக் கூறி யிம் மூன்றையும் ஒரு பெயரால் பாசமென்று கூறியது. ஏனையவற்றுக்கும் இவ்வாறேகொள்க. அநாதி வஸ்து அழியாதோ எனில், அழியாது. வறுத்துவதக்கின வித்தினிடம் முளைக்கும் சக்தி யொழிந்தால் எல்லா விதைகளினிடத்துமிருக்கும் அச்சக்தி ஒழியாமல் நிலைபெற்றிருப்பதுபோல, பிரமஞானத்தால் தகிக்கப்பட்ட கன்மம் ஜீவனைவிட்டு ஒழிந்தால் அக்கன்மம் வேறொரிடத்தில் நிலை பெற்றே நிற்கும். இவ்வாறு கன்மம் அழியாமலிருக்குமென்பது ஞான நூல்களினபிப்பிராயம். ஆதலால் கன்மம் என்கிற அந்த வஸ்து முற்றிலும் அழிந்து போவதில்லை. அங்ஙனமிருந்து ஜீவனைப் பந்தித்தலால் பாசம் எனப்பெயர் பெறும். ஆன்ம சொரூபத்தை மறைத்தலால் மலம் என்று பெயர்பெறும். அம்மலமொழிந்து நின்ற ஜீவனும், பாசத்தாற் கட்டுண்டமைபற்றி யுண்டான பசு என்

கிற பெயரையும் இன்ப துன்பங்களை யறியுந்தன்மை பற்றி எழுந்த ஜீவ னென்னும் பெயரையும் அடைவதில்லை. ஆன்மாவென்றே கூறப்படும்.

இதனுள் உண்மை யாது எனில், அக்கன்மம் உலகப்பொருளாதலால் இல்பொருளென்றுவது உள்பொருளென்றுவது துணிந்து கூறப்படாத நிலைமையிலுள்ளது. மலத்திற்கு ஒரு சொரூபத்தை மறைப்பதன்றி வேறு சொரூபவிலக்கணங் கூறப்படவில்லை. அதுதான் மேற்பட்டு எல்லாப் பொருள்களையும் மறைத்துக்கொண்டு நிற்குந் தன்மை யுளதாயின் அதனை யாவருணர்வார்கள்! இம்மலத்தை அவித்தை யென்றும், அது துணிந்து கூறப்படாத நிலைமையிலுள்ளதாதலால் அநிர்வசனீயம் என்றும் வேதாந்த நூல்கள் கூறும். இது பற்றியே, "இருள்சே ரிருவினையுந் தீண்டா விறைவன்—பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்ற திருக்குறளுக்கு உரை விரித்துக் கூறிய பரிமேலழகரும் "இருள் என்றது அவித்தையை, அது இத்தன்மையது என்று மனிதர் அறிவுகொண்டு துணிந்து கூறப் படாமையின் 'இருள்' என்றார்" என்று கூறினர். சைவசித்தாந்தத்திலும் பதியை நோக்கப் பசு பாசங்கள் அசத்தாம். பசு பாசங்களை நோக்கப் பதி சத்தாகவே யிருப்பின், பசு என்பது பதியை நோக்க அசத்தும் பாச த்தை நோக்கச் சத்துமாவான். பாசம் என்பது பதியை நோக்க அசத் தும், பசுவை நோக்கச் சத்துமாம்; பதி பசுக்களை நோக்க அசத்தாகவே யிருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. பாசம் பசுவை நோக்கச் சத்தா மென்று கூறியது, அதைப் பந்தித்து நிற்குந்தன்மை பற்றியாம். இயல் பில் அசத்தேயாம். இன்னும் சைவசித்தாந்தத்துள் ஒருசாரார், பதியை நோக்கப் பசுபாசங்கள் அசத்தாவதுபோல பதி பசுவை நோக்கப் பாசம் அசத்தேயாமென்பர். ஆதலால் அநிர்வசனீயம் என்று பாசவிலக்கணங் கூறிய சான்றோர் தன்மை வியக்கத் தக்கதேயாம்.

மற்றுமோர் சைவசித்தாந்திகள் அநாதியாகிய பாசம் முத்தியிலும் அழியாமலிருக்கும் என்று கூறுவார். அவர் கூறியது எவ்வாறெனில்,

"வாக்கு மனமிறந்த வான்கருணை யாளனொரு
தாக்கறவே நிற்குந் தனிமுதல்வா—நீக்காப்
பதியினைப்போ னித்தம் பசுபாச மென்றாய்
கதியிடத்து மூன்றினையுங் காட்டு"

என்று குருவை நோக்கிச் சீடன் வினவியவாறு கூறிற்று. அவ்வினு வாவது, பதியைப்போலப் பசு பாசங்களும் அநாதியாகு மென்று கூறி னீரே. முத்தியிடத்தில் அம்மூன்று முதலும் நிலைபெற்று நிற்கும் முறை மையை எனக்கருளிச் செய்யவேண்டுமென்பது. அங்ஙனம் வினவிய கேள் விக்குக் குரு வருளிச்செய்தவாறு:

"முத்திதனின் மூன்று முதலு மொழியக்கேள்
சுத்தவநு போகத்தைத் துய்த்தலணு—மெத்தவே
யின்பங் கொடுத்தலிறை யித்தைவிளை வித்தன்மல
மன்புடனே கண்டுகொளப் பா".

பதி பசு பாசங்களாகிய முப்பொருள்களும் முத்தியிலும் நிலை பெற்று நிற்கு நிலைமையைக் கூறுகிறேன் கேள். முத்தியில் பேரின்பத்தைப் புசிக்கிறது ஆன்மா. பேரின்பத்தை மிகுதியாகக் கொடுப்பது பதி. பேரின்பத்தை மேன்மேலும் விளைவிப்பது மலம் என்பதாம்.

இதனால் பந்த காலத்தில் ஜனன மரணாதி துன்பங்களையும் சம்சார துக்கத்தையும் அபரிமிதமாகக் கொடுத்த மலம் பந்தித்தலொழிந்து நிற்குங் காலத்தில் பேரின்பம் ஒன்றனையே மிகுதியாக விளைவிக்குமென்று அதன் தன்மை கூறப்பட்டது. இவ்வாறு மதாசாரியர்கள் பற்பலவிதமாய்க் கூறுகின்றமையால் கன்மத்தின் தன்மை அநிர்வசனீயம் என்பதேயுசிதமாம்.

ஆணவம் கான்மியம் மாயேயம் எனக் கூறப்படும் மூன்றையும் மலமென்பர். இவற்றுள் ஆணவமென்பது ஆன்மாக்களை யுடனிகழ்ந்து அநாதியிலே பற்றிப் பந்தித்து நிற்பது. இது நீங்கினாற்றான் ஆன்மாக்களுக்கு முத்தி கிட்டும். கான்மியம் என்பது ஆன்மாவின் சரீரத்தைப் பற்றி நின்று இன்பதுன்பங்களை யளிப்பது. மாயேயம் என்பது பிரமலோகபரியந்தம் ஆன்மாக்களுக்குத் தனுகரண புவனபோகங்களாய் நிற்பது. இவற்றுள் முதற்கூறிய விரண்டும் யாம் ஈண்டு விவரித்துக் கூறிய கன்ம மெனப்படுவன. அவற்றுள்ளும் ஆணவம் காரணமும் கன்மம் அதன் காரியமுமாகும். காரிய மெனப்படும் இக்கன்மம் அகன்மம், விகன்மம், கன்மம் எனப்படும். புண்ணியம் பாவமிரண்டு மாகாத செய்கை அகன்மமெனப்படும். அது சிரித்தல் விக்கல் முதலியன. செய்த பாவமாவது விகன்மம். அது திருடல் பொய்கூறல் பிறர் மனைவியை விரும்புதல், கட்குடித்தல், தத்தம் வருணாச்சிரம தருமங் கடந்தொழுகுதன் முதலாயின. இதனாலாம்பயன் நரகதுன்பமாம். ஒழியாப்பெரும் சம்சாரமுமாம். கன்மம் என்ற மூன்றாவது நித்தியம், நைமித்திகம், காமியம் என மூவகைப்படும். நித்திய கன்மம், செய்யாமல் விட்டால் பாவத்தை யுண்டாக்கும். செய்தால் அதை விடுவதால் வரும் பாவத்தை வராது தடுக்கும். நிமித்தங் கண்டவிடம் செய்வது நைமித்திகம். இது செய்தால் புண்ணியமும் செய்யாது விட்டால்பாவமுமாம். காமியம் என்பது செய்தால் நற்பயனைத்தரும். செய்யாமல் விட்டதனால் குற்றமாகாது. நித்தியகன்மத்துக்கு உதாரணம் சந்தியா வந்தனாதிக் கிரியைகள். இவற்றைச் செய்யாவிட்டால் பிராமணத்துவம் ஒழியும். செய்தால் அதை நீங்காமல் தடுக்கலாம். நைமித்திகத்துக்குதாரணம் அமாவசை தர்ப்பணம். இதைச் செய்தால் பிதிர்த்தேவதைகள் திருப்தி யடைந்து ஆசீர்வதிப்பார்கள். விட்டால் சபிப்பார்கள். சாந்திராயணாதி விரதங்களே காமிய கர்ம மெனப்படும். இவற்றைச் செய்தவன் நற்பயன்களைப் பெறுவான். செய்யாதவன் குற்றப்படமாட்டான். ஆகையா லிம் மூவகைக் கன்மங்களையும் அவசியம் அனுட்டிக்க வேண்டும். இக்கன்மங்களைத் தவிர மனமும் சரீரமும் சுத்தப்பட வேறு வழியில்லையாகையால் கன்ம மின்றியமையாததா மென்க. எல்லாங் கன்மத்தால் முடிவாகின்றது என்பது முதல் இதுகாறும் சுபட்ச நோக்கியே கூறப்பட்டது பெரும்பான்மையு மாதலால் ஆரிய சிகாமணிகள் கன்மத்தை விடாமற் செய்யவேண்டுவது அவசியமாமென்பது புலப்படும். கன்மத்தைப்பற்றி நெடுந்தூரம் சுபட்ச பரபட்ச முறையாக விரித்துக் கூறியவதனால் இதுகாறும் முடிவு பெறாதிருந்தது. இன்று செந்திலாண்டவன் திருவருளை முன்னிட்டுக் கன்மத்தைப் பூர்த்திசெய்கின்றோம்.

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

முற்றிற்று.

மகா அலக்ஸாண்டரும் பிராம்மண சந்நியாசிகளும்.

[இது ஸ்ரீமான் இராவ்ஸாஹேப் R. கிருஷ்ணராவ் போன்ஸ்லே, M. R A. S. (Asstt. Secretary to the Commissioner of Govt. Examinations, Madras.) அவர்களால் வரையப்பட்டு இந்தியன் ரிவியூவில் பிரசுரிக்கப் பட்டிருந்ததன் மொழிபெயர்ப்பு.]

(இதிலுள்ள விஷயங்கள் மேல்நாட்டுப் பண்டிதர்கள் வரைந்துள்ள பூர்வீக இந்தியசரித்திரங்களிலிருந்து திரட்டப்பட்டவையாகும் என்று ஸ்ரீமான் போன்ஸ்லே அவர்கள் தமது வியாசத்தின் தலைப்பில் விவரமாகக் கூறியிருக்கிறார்கள்.)

உலகம் முழுமையும் இந்தியாவிற்குப் பட்டிருக்கும் கடன் ஒவ்வொரு நாளும் மிக்க அதிகமென்றே நான் உணருகிறேன். கவிவாணரும் சாத்திர ஆராய்ச்சிப் பண்டிதருமான லாரென்ஸ் பினியன், (Laurence Binyon) என்பவர் "மகா அலக்ஸாண்டர் தன் தீவிரபுத்தி யுச்சத்திலிருந்த காலத்தில், தியான பூமியும், யோகபூமியும், ஞானபூமியுமாகிய இந்தியாவின்மீது படையெடுத்த காலம் உலகம் மிக்க பிரமையடையத்தக்க காலங்களில் ஒன்றென்றே நான் எப்போதும் கருதுகிறேன்" என்று கூறுகிறார். இன்னும் அவர் பின்வருமாறு கூறுகிறார் :—

"மகா அலக்ஸாண்டர் படையெடுத்து வந்தது அதிகமான பூமியைக் கட்டியாளவேண்டுமென்ற ஆசையாலேயே யென்று சாதாரணமாய்க் கருதப்படுகிறது. ஆனால் அது மனிதரின் அஞ்ஞானம் ஒழிவதற்காகவென்ற முன்னமைப்பின்படி நடந்த ஒரு விஷயம் என்றே நான் கருதுகிறேன். அலக்ஸாண்டர் அதுகாறும் தான் எங்கும் சந்தித்திராத ஒன்றை இந்தியாவில் சந்தித்தார். அவரைப் பிரமிக்கச்செய்து மேற்கொண்டுவிட்ட ஒன்றை—அதாவது **இந்தியரின் மனதைச்** சந்தித்தார். மனதைப்பற்றிய (மனோதத்துவ) விஷயங்களையும் ஆன்மசொரூபத்தைப்பற்றிய விஷயங்களையும் இடைவிடாது சலிக்காது சிந்திப்பதே இந்தியருக்கு எப்போதுமுள்ள இயற்கைக் குணமென்று சரித்திரத்தால் விளங்குகிறதென்றும் அந்நடக்கை ஐரோப்பாவிலுள்ள நம்மைப் பந்தயத்திற் கழைக்கிறதென்றும் நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்."

அர்ரியன் (Arrian) என்பவர் எழுதியுள்ள நூலில் பின்வரும் விஷயத்தைக் கூறுகிறார் :—

"மகா அலக்ஸாண்டர் இந்தியாவிற்குப் படையெடுத்து வந்தபோது பாம்பின் விடத்தை நீக்கக் கிரேக்க வைத்தியர்களிடம் தக்க ஔஷதமில்லை யென்று தெரியவந்தது. ஆனால் இந்தியர்கள் அந்த விஷத்தை நீக்கும் சக்திவாய்ந்தவர்களாக விருந்தார்கள். ஆகையால் அலக்ஸாண்டர் சாமர்த்தியவான்களான இந்திய வைத்தியர்களைத் தமதருகில் வைத்துக் கொண்டிருந்தாரென்றும், தமது பரிவாரத்தைச் சேர்ந்தவர்களில் யாருக்கேனும் விஷந்தீண்டினாலும், யாரேனும் வியாதியுற்றாலும் அவர்கள் உடனே தமது கூடாரத்திற்கு வந்து அங்குள்ள பிராம்மண வைத்தியர்களிடம்

கூறினல் அவர்கள் ஆச்சரியமும், இன்னும் தெய்வீக சக்தியுள்ளதுமான வழிகளால் இவர்களுக்குச் சுகமுண்டாக்குவார்களென்றும், தமது பாஷேய முழுமையும் விளம்பரப்படுத்தி யிருந்தார்" என்று நியர்சஸ் என்பவர் கூறுகிறார்.

அந்தப் பிராம்மணர்களில் சிலர் திகம்பர அதாவது நிர்வாண ஞானிகளாகவும் ஹடயோகிகளாகவும் இருந்தார்கள். மகா அலக்ஸாண்டர் அவர்களில் சிலரைச் சந்திக்கும் அதிஷ்டம் பெற்றவராக விருந்தார்.

இந்தப் பிராம்மண விருடிகள் சுயேச்சையா யிருப்பவர்கள். அவர்கள் அடவிகளில் தாமாக உதிர்ந்து கிடக்கும் காய், கனி, இலை, சருகு முதலியவற்றை யுண்டு ஆற்று நீரைப் பருகி சீவிப்பதன்றி மாமிசபக்ஷணமாவது தீயில் பக்குவப்படுத்தப்பட்ட எவ்வித உணவையாவது புசிப்பதில்லை. அவர்கள் போர்வை மரப்பட்டைகளே. அவர்கள் விசேஷமாய் இத்தேகம் ஆன்மாவிற்கு ஓர் போர்வையாகக் கடவுளாலளிக்கப்பட்டதென்று கூறி நிர்வாணிகளாகவே வாழ்நாட்களைக் கழிக்கிறார்கள். அவர்கள் கடவுள் சோதிமயமானவர் என்ற கொள்கையுடையவர்கள். ஆனல் அச்சோதி சூரியன் அல்லது அக்னிபோன்றதாவது அல்லது நாம் ஊனக்கண்ணல் காணத்தக்கதாவது அல்ல. ஆனல் கடவுள் அவர்களுக்குப் பிரபஞ்சமாகவே விளங்குகிறார். அவர்கள் அப்படிக் கூறுவது வீண் வாய்ப்பேச்சுமட்டுமல்ல. ஞானிகள் அந்த ஞான சொரூபத்தை யெவ்வாறு தரிசிக்கிறார்கள் என்ற மர்மத்தைத் தக்க ஊகத்தோடு உணர்கிறார்கள். அவர்கள் கடவுளின் நாமத்தை ஒருவித பக்திபொருந்திய தொனியோடு உச்சரிக்கிறார்கள். கீர்த்தனங்களால் பகவானை பஜிக்கிறார்கள். மேலும் அவர்கள் எல்லா மனிதர்களும், யுத்தத்தில் பிடிபட்ட சிறையாளர்களைப்போல் தங்களுக்குள்ளிருக்கும், விருப்பு, வெறுப்பு, காமக்குரோதாதிகள் முதலிய எதிரிகளின் அடிமையா யிருக்கிறார்கள் என்றும், அந்தக் காமக்குரோதாதிகளாகிய எதிரிகளை யடக்கிப் போர்வீரன் யுத்தகளத்தில் ஜெயமடைவதுபோல் ஜெயம் பெற்றவனே கடவுளை யடைவான் என்றும் உறுதியாய்க் கூறுகிறார்கள். அவர்கள் மரணத்தை வெறுப்போடு அலட்சியமாகக் கருதுகிறார்கள்.

(தொடரும்)

தபால் கொள்ளைக்காரர்கள்

(279-ம் பக்கத் தொடர்ச்சி)

16-வது அத்தியாயம்.

கள்ளர்கள் ஆலோசனை செய்தமறுநாள் ஆனந்தவலிங் தன்குறிப்புகளை மிக்க சுறுசுறுப்போடு கவனிக்கத் தொடங்கினன். இப்போது நேரிட்டிருக்கும் சமயம்போல் எப்போதும் நேரிட்டதில்லை. இச்சமயம் எப்படியும் கள்ளரைப் பிடிக்க இதுவே யனுகூலமான சமயமென்று அவன் மனதில் நம்பிக்கையாயிருந்தது.

அவர்கள் ஆலோசனை செய்த சமயம் யாரோ ஒத்துக் கேட்டதாய்க் கள்ளர்கள் பயந்தார்களல்லவா! அந்த ஆள் நமது ஆனந்தலிங்கேயன்றி வேறு யாருமல்ல. அவன் அவர்களுடைய வார்த்தைகள் ஒன்று விடாமல் கேட்டுக்கொண்டான். இப்போது அதற்குத் தக்கமாதிரிதான் நடந்து கொள்ள ஆலோசனை செய்யத் தொடங்கினன்.

ஒரு விஷயம்மட்டும் அவனுக்கு விளங்கவில்லை. அதாவது அக்கன்னிகையிருக்குமிடம் வெள்ளைக் குடிசை யென்று கள்ளர் பேசிக்கொண்டார்கள். அக்குடிசை யெங்கிருக்கிறதென்று அவனுக்கு விளங்கவில்லை. ஒருசமயம் நகரைக்கடந்து சமீபத்திலுள்ள ஆற்றோரத்தில் சில விடங்களிருக்கின்றன. அவற்றில் ஒன்றுயிருக்குமோ என்று நினைத்தான். அவன் உத்தேசித்ததே யுண்மை.

தன் வேலைகளை யொருபக்கம் நடத்திக்கொண்டிருந்தாலும் ஒருபக்கம் இரங்கநாதன் அறையின்மேல் விடாது கண்வைத்தபடி யிருந்தான். அன்று பிற்பகல் கையில் ஒரு சிறு கடிதத்தை வைத்துக்கொண்டு ஒரு சிறுவன் இரங்கநாதன் அறையிலிருந்து வெளிவந்ததைக் கண்டான்.

உடனே அவன் இன்ன காரியமாய்ச் செல்கிறான் என்று ஆனந்தலிங்கின் மனதிற் பட்டபடியால் அச்சிறுவன்மேல் கவனத்தை நாட்டினன். சிறுவன் செல்லும் பாதையே பின்னல் சென்று அவன் வீதியைக் கடந்து வேறு வீதிக்குத் திரும்பியபின் இரண்டெட்டாய்ச் சென்று அவன் தோளைப் பற்றினன்.

அங்கு கூலிக்குச் சில்லறை வேலைகள் செய்யும் சிறுவர்கள் சாமானியரல்ல. ஆனந்தலிங் அவனைப் பிடித்ததே அவன் "விடையா! நான் அவசரவேலையாய்ச் செல்கிறேன்" என்று கூறிக்கொண்டே தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றான்.

ஆனந்தலிங்:—இருடா இரு ஒரு சங்கதி யிருக்கிறது.

சிறுவன்:—நான் நிற்கமுடியாது. அவசரமாய்ச் செல்லவேண்டும்.

ஆனந்:—என்ன வேலை? அப்படிப்பட்ட வேலை?

சிறு:—என் சங்கதிகளை நான் யாருக்கும் கூறமாட்டேன். நான் மூடனல்ல.

ஆனந்:—அப்படியா! உன்னைக் கூறும்படி செய்கிறேன் பார்.

சிறு:—நீ யென்ன செய்வாய். நீ போலீஸ்காரனுக இருக்கலாம். இருந்தாலென்ன? நான் எங்கும் திருடவில்லை.

ஆனந்:—அது மெய்யே. நீ திருடவில்லை. எனக்கு வேண்டிய ஒரு வஸ்து உன்னிடமிருக்கிறது.

சிறு:—என்ன வஸ்து?

ஆனந்:—ஒரு தந்தி சமாசாரம்.

இதைக் கேட்டதே பையன் திடுக்கிட்டுவிட்டான். "உன் விவகாரம் என்ன? வெளிப்படையாய்க் கூறு. அப்படி விவகாரமாய்ப் பேசினல் சரி" என்றான்.

ஆனந் :—"ஏதோ அதைக் கொடு!" என்றான்.

சிறு :—அது என்னுடையதல்ல, அதைக் கொடுக்கமாட்டேன்.

ஆனந்தஸிங் உடனே சிறுவனை நோக்கி நீ யதைக் கொண்டுபோகக் கூலி என்னவென்றான்.

சிறுவன் ஆறணா கொடுத்தானென்றான்.

ஆனந்தஸிங் உடனே ஒரு ரூபாயெடுத்துச் சிறுவனிடம் கொடுத்தான்.

சிறு :—"ஆ இது விவகாரத்திற்கு ஒழுங்கு. இப்படி முன்னமே கூறுவது தானே" என்று கூறிக்கொண்டே தன்னிடமிருந்த கடிதத்தைக் கொடுத்தான்.

ஆனந்தஸிங் அதை வாங்கிக் கீழ்க்கண்டபடி வாசித்தான்.

"நவீனபுரி - கொழும்புச் செட்டிக்கு முக்கியமான அவசரபேரம், நாளைக்காலை அவசியமாய் மேலையூருக்கு வரவும். ஸ்டேஷனில் சந்திக்கப்படும்."

இதை வாசித்ததே ஆனந்தஸிங் முகமலர்ச்சியடைந்து புன்னகை புரிந்து, "அடே இரங்கநாதா! கொழும்பு செட்டியா? உனக்கு அவனைப் பற்றி என்ன தெரியும். எனக்கு மிகுதியாய்த் தெரியுமென்று நீ யறியாய் பாபம்" என்று கூறிக்கொண்டே அதை மடித்துக் கையில் வைத்துக் கொண்டு திரும்பினான்.

அதைக் கண்ட சிறுவன் "என்ன அதைக் கூடவே எடுத்துக்கொண்டு போகிறாயே. அதைக் கொடுத்துவிட்டுப் போ" என்றான்.

ஆனந்தஸிங் "சரிதான் நீ போ" என்றான். சிறுவன் அப்படியானால் என்னிடம் அதைக் கொடுத்த மனிதனிடம் எல்லாச் சங்கதியும் சொல்லி விடவேண்டியதே யென்று கூறிக்கொண்டே ஓட்டம் பிடித்தான்.

ஆனந்தஸிங் அவனைத் துறத்திச் சென்று பிடித்துக்கொண்டு, தன் மார்பிலுள்ள பதக்கத்தைக் காட்டி "நான் யார் தெரியுமா. பத்திரம், நீ மறுபடி யந்த ஹோட்டலருகிற் சென்றால் சுட்டுத் தள்ளிவிடுவேன்" என்றான். அவன் அவ்வளவுகூடச் சொல்லவேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில் துப்பறியும் ஆசாமிகளுடைய விஷயம் அந்நகரத்துக் கூலிச் சிறுவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

பையனை விட்டுப் பிரிந்தபின் ஆனந்தஸிங் மறுபடி அந்தச் சீட்டைப் பார்த்தான். அவன் மனதில் திடீலென்று ஒரு புது யோசனை யுதித்தது. அவன் முகத்தில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று. தனக்குத்தானே சற்றுநேரம் சிந்தித்து "ஆ கள்ளப்பயல்களே! உங்கள் பிரியப்படிக்கே கொழும்பு செட்டி நாளைக் காலை வண்டிக்குக் கட்டாயம் வருவான்" என்று கூறிக்கொண்டே தன்னறைக்குச் சென்று அரைமணி கழித்து நவீனபுரி மார்க்கமாய்ச் சென்ற இரயில் வண்டியி லேறிச்சென்று நான்காவது ஸ்டேஷனில் இறங்கி இரவு அங்கு தங்கிவிட்டான்.

மறுநாட் காலை நவீனபுரியிலிருந்து வரும் மெயில் மேலையூரில் வந்து

நின்றதே அதிலிருந்து இறங்கிய மனிதர்களில் ஒருவன் யாவரும் கவன மாய்ப் பார்க்கத்தக்கவனுயிருந்தான்.

அவனுக்கு வயது 50-க்கு மேலிருக்கும். அவன் தலைப்பாகை பிரம் மாண்டமானதா யிருந்தது. அவன் புருவங்கள் மயிர் நிறைந்து தொங்கிக் கொண்டு அவனுடைய கண்களிலிருந்த கூர்மையான பார்வையை மறைத் துக்கொண்டது. க்ஷவரச் செலவை மீத்திக்கொள்ள விரும்பியவன் போல் அவன் தாடியும் மீசையும் அவ்வளவு ஒழுங்கு கடந்து வளர்ந்து அவன் நாசி தவிர மற்ற முகத்தின் பாகத்தை யெல்லாம் மூடிக்கொண் டிருந்தன.

அவன் ஜாதி வழக்கம்போல் உள்ளே இரண்டு மூன்று அங்கிகளை யணிந்துகொண்டு மேலே ஒரு நீண்ட அங்கி யணிந்திருந்தான். அந்த அங்கி சற்று விலையுயர்ந்த துணியால் தைக்கப்பட்டதெனினும் அது புதி தாய்த் தைக்கப்பட்டுப் பலவருடங்களாயிருக்கும் என்று நன்ருய் விளங்கி யது. அதில் குறைந்தது இருபது வட்டங்களாவது போடப்பட்டிருந்தன. அம்மாதிரியே, பலதரம் பழுது பார்க்கப்பட்டதால் அனேகம் சிறிதும் பெரிதுமான வட்டங்கள் போட்டுத் தைக்கப்பட்ட ஒரு பெரிய குடையை அக்குளிலும், புராதனமான ஒரு பிரயாணப் பையைக் கையிலும் வைத்துக் கொண்டும், ஒரு கையில் மூங்கில் தடியை வைத்துக்கொண்டும் இருந்தான். அவன் பாதரட்சையோ மற்றவைபோலவே அவனுடைய உலோப குணத் தைக் காட்டிற்று.

அவன் வண்டியிலிருந்து இறங்கியதும் ஸ்டேஷனில் பின்பக்கம் சென்று யாரையோ தேடுபவன்போல் பார்க்கத் தொடங்கினுன். சாமி நாதனுடைய வண்டி யங்கு வந்து காத்துக்கொண்டிருந்தது. சாரதி தன க்குக் கூறப்பட்ட அடையாளத்தால் இவனை யறிந்துகொண்டு “ தாங்கள் தானே கொழும்பு செட்டியார் ” என்று கேட்டறிந்துகொண்டு வண்டியில் ஏற்றிக்கொண்டுபோய்ச் சாமிநாதன் மாளிகையில் இறக்கிவிட்டான். செட்டி கள்ளர் இருவரையும் கண்டதே,

“ ஆ! உங்கள் தரிசனங் கிடைத்தது எனக்குப் பெரும் புண்ணியம். அதிலும் தங்களைப்போன்ற பெரிய மனிதரிடம் நான் இலேவாதேவி செய்ய நேரிட்டது எனக்குப் பெரிய கௌரவமே ” என்ருன்.

இரங்கநாதன் :—“ நல்லது நீ ஆயத்தமாய் வந்திருக்கிருயா. ஏனெனில் நாங்கள் மிக்க அவசரமாய் ஊரைவிட்டுப் போகவேண்டும்” என்ருன்.

செட்டி :—நீங்கள் ஊரைவிட்டுப் போகவேண்டிக் கட்டாயப்படுத்தப் படு கிறீர்கள்போலும் ” என்ருன்.

இரங்கநாதன் குற்றமுள்ள நெஞ்சாகையால் அவன் மனதில் செட்டி யின் வார்த்தை உருத்தியது. அதனுல் அவன் கோபமடைந்து “ நீ சொல் வதென்ன? எங்களைக் கேலி செய்யும்படி நான் உன்னை வரவழைக்க வில்லை ” யென்று கூறினுன்.

கொழும்புச்செட்டி மிக்க பயந்தவன்போல்,

"நான் குற்றமாய் நினைந்து ஒன்றும் கூறவில்லை. உங்களைப்போன்ற பெரிய மனிதர்கள் அனேகர் என்னிடம் வருவதுண்டு. சில சமயம் மிக்க வியாதியடைந்து திடீலென்று வெளிநாட்டிற்குப் போகவேண்டி நேரிடும். சிலசமயம் தங்கள் சுற்றத்தார் அல்லது நண்பர்கள் ஏதாவது ஆபத்தில் சிக்கிக்கொள்வார்கள். அவர்களுக்கு உதவிசெய்யவேண்டி யிருக்கும். வியாதியினால் அவசரமாய் இடம் மாறவேண்டி யிருக்கும். இவ்வளவேயன்றி மற்றபடி நான் குற்றமாய் நினைத்து ஒன்றும் கூறவில்லை........."

இரங்கநாதன் செட்டியிடம் அதிககோபமாய்ப் பேசக்கூடாதென்று சிந்தித்துக்கொண்டு "நண்பரே! நீ கூறுவது உண்மையே. நாங்கள் எவ்வளவு துரிதமாய்ச் செல்லக்கூடுமோ அவ்வளவு துரிதமாய்ச் செல்லவேண்டியதே. அதற்காகவே யுன்னை யிவ்வளவு அவசரமாய் வரவழைத்தது. இனி விவகாரம் நடக்கட்டும். இந்த மாளிகையை யெவ்வளவிற்கு எடுத்துக்கொள்ளுகிறாய்? இதோ இதைச் சேர்ந்த பத்திரம் முதலியவைகள்" என்று ஒரு கடிதக்கட்டை யவனிடமளித்தான்.

செட்டி யாவற்றையும் பார்த்தான். மொத்தம் 12 ஆயிரம் தாளும். செட்டி எவ்வளவோ சாமர்த்தியமாய்ப் பேசிக் கடைசியில் இரண்டாயிரம் கொடுப்பேன் என்றான். பிறகு பேரம் நடந்ததையும் செட்டியின் தந்திர சாமர்த்தியங்களையும் விவரமாய் எழுதவேண்டுமாயின் பல பக்கங்கள் கொள்ளும். ஆகையால் சுருக்கமாகவே கூறி முடிக்கிறோம்.

செட்டி அடிக்கடி தன் கூர்மையான பார்வையால் சாமிநாதனைப் பார்த்துக்கொண்டே யிருப்பான். கள்ளர்கள் சொத்தின் அளவு அதிலுள்ள விலையுயர்ந்த சாமான் இவற்றின் மதிப்பைக்கூறி அதிகவிலை தரும்படி கேட்டால்,

"நான் இது தாளாது என்று கூறவில்லை. நான் அவ்வளவு பணக்காரனல்ல. அவ்வளவு பணம் என்னிடமில்லை" யென்பான். இவ்வாறு பேசிப்பேசி முடிவில் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டான்.

கள்ளர்கள் மிக்க ஆத்திரத்தோடு "சரி சரி எடு பணத்தை" யென்று துள்ளிக் குதித்தார்கள். செட்டியாரோ "இவ்வளவு ஆத்திரப்படவேண்டாம். நான் பணம் கையில் வைத்துக்கொண்டில்லை" என்றான்.

இதைக்கேட்ட இருவரும் பெருங் கலக்கமும் கோபமும் அடைந்து ஒருவரை யொருவர் பார்த்து மிரளமிரள விழித்தார்கள். இரங்கநாதன் தன் கோபத்தை யடக்கிக்கொண்டு "செட்டியாரே நான் தந்தியிலேயே சர்வ ஆயத்தமாய் வரும்படி கூறியிருந்தேனே. நீ கையில் பணத்தைக் கொண்டுவந்திருக்கிறாய் என்றல்லவோ வெண்ணியிருக்கிறோம். நாளையிந்நேரம் வெகுதூரம் போய்விட்டிருக்கவல்லவோ வெண்ணியிருந்தோம்" என்றான்.

(தொடரும்)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

சந்தா நேயர்கட்கு

அறிவிப்பு:—பிப்ரவரிமீ சந்தா செலுத்தவேண்டுமென்ற விளம்பரம் 'மனமோகினி' சஞ்சிகையின் சந்தாதார்களுக்கேயன்றி, "ஆனந்த போதினி"யைப் பற்றியதல்ல.

2. 8-வது வருட சந்தாவை தவணைக்குள் (14-6-'22) செலுத்தியவர்களுக்கெல்லாம் உருத்ரோத்காரி வருட பஞ்சாங்கம் மாசிமீ முதல்வாரம் தொடங்கி யனுப்பப்படும். ஆதலின் சந்தாதார்கள் அதற்காக வீணே கடிதம் வரையவேண்டாம்.

இங்கிலாந்தில் பத்திரிகை.

இங்கிலாந்து தேசத்தில் வெளியாகும் பத்திரிகைகளின் மொத்தம் 2300. தினசரி 180 பத்திரிகைகள்தான். இதில் "டெரிலி ஹிராலடு" என்ற ஒரு தினசரியும், 45 வாரப் பத்திரிகைகளும், 75 மாதாந்தரமும் தொழிலாளர்களுக்குச் சொந்தமானவை.

பத்திரிகைகள்	சந்தாதார்தொகை	பத்திரிகைள்	சந்தாதார்தொகை
"டெயிலி மெயில்"	18,17147	"டெயிலி ஸ்கெட்ச்"	8,37,654
"டைம்ஸ்"	75,000	"ஈவினிங் நியூஸ்"	8,94,568
"டெயிலி மிர்ரர்"	10,59,861	"ஸ்டார்"	7,02,600
"டெயிலி எக்ஸ்பிரஸ்"	8,55,000		

பத்திராதிபர்களிடமிருந்து சர்க்காருக்குக் கிடைக்கும் வருமான வரி ஒரு கொடியே முப்பது லட்சம் பவுனாகும். இந்தியாவில் ஒரு லட்சம் சந்தாதார்களுள்ள பத்திரிகை கூடக் கிடையாது.—(லோகோபகாரி)

100 வயதுள்ளவர்கள்.

பால்கன் நாடுகளுள் ஒன்றான ஸெர்வியாவில் நூறு வயதுள்ளவர்கள் மிகுதி. அங்கேயுள்ளவர்களுள் 2260 பேர்களுக்கு ஒருவன் 100 வருஷம் வாழ்ந்தவன். இந்தக் கணக்குப்படி அந்தச் சிறிய நாட்டில் 100 வயதுள்ளவர்களும் மேற்பட்டவர்களுமாக 575 பேர் இருக்கிறார்கள். அயர்லாந்திலுள்ள ஜனங்களில் 8130 பேருக்கு ஒருவன் 100 வருஷம் வாழ்ந்தவன். அங்கே மொத்தம் 576 பேர் நூறு வயது சென்றவர்கள் இருக்கிறார்கள். ஸ்பெயினில் 43,000 பேரில் ஒருவன் நூறு வயது சென்றவன். நார்வேயில் சுமார் லட்சம்பேரில் ஒருவன்வீதம் 23 பேர் 100 வயது சென்றவர்கள் இருக்கிறார்கள். இங்கிலாந்தில் 2 லட்சம் பேரில் ஒருவன்வீதம் 192 பேர் இருக்கிறார்கள். பிரான்ஸிலும் அப்படியே 213 பேர் இருக்கிறார்கள். ஸ்வீடனில் 20 பேர் 100 வயது சென்றவர்கள். டென்மார்க்கில் இருவர் மட்டும் 100 வயது சென்றவர்கள். 30 கோடிப் பேரைக் கொண்ட நமது தேசத்தில் 100 வயது சென்றவர் இப்பொழுது மிகவும் சிலரா யிருக்கின்றனர்.

“ஆனந்தபோதினி” பஞ்சாங்கம்.

துந்துபிஞு பங்குனிமீ—சாலிவாகனம் 1845—கலி 5024
பசலி 1332—கோல்லம் 1097-98—ஹிஜ்ரி 1341
இங்கிலீஷ் 1923ஞு மார்ச்சுமீ—ஏப்ரல்மீ

பங்குனி	மார்ச்சுமீ	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	14	புத	து15-38	திரு-11-53	சி11-51பி	மீனரவி நா-10-55 ஷடசீதி புண்யகாலம்
2	15	வியா	திர19-35	அவி-17-5	சித்17-5ம	நாமகரணம் செய்ய
3	16	வெ	சது24 35	சதை-23-13	சித்-60	போதாயன அமாவாசை
4	17	சனி	●30-5	பூரட்-30-10	ம30-10சி	அமாவாசை
5	18	ஞா	பிர36-23	உத்-37-38	அமி60	யுகாதி பண்டிகை,சைத்ரசுத்தம்
6	19	திங்	துதி42-55	ரேவ-45-23	சித்-60	கரிநாள்
7	20	செ	திரி49-33	அசு-53-8	சித்-60	ஆண்டோளன்திரிதிகை
8	21	புத	சது55-48	பர-60...	சித்-60	மேஷாயனம் நா-36-48
9	22	வியா	பஞ்-60...	பர-0-38	சி0-38மர	கிருத்திகை
10	23	வெ	பஞ்1-23	கிரு-7-23	சி7-23மர	சஷ்டி
11	24	சனி	சஷ்5-50	ரோ-13-5	சித்60	கங்கோற்பத்தி
12	25	ஞா	சப்8-53	மிரு-17-43	சித்60	[நவமி
13	26	திங்	அஷ்10-10	திரு-19-55	சி19-55அ	ஸ்ரீராமஜயந்தி, ஸ்ரீராம
14	27	செ	நவ9-30	புன-20-38	சித்-60	தர்மராஜா தசமி
15	28	புத	தச6-55	பூச19-23	சித்-60	கரிநாள், ஸ்மார்த்த ஏகா
16	29	வியா	ஏகா2-3 து56-25	ஆயி-16-20	சி16-20அ	வைஷ்ணவ, மத்வ ஏகாதசி, வாமன துவாதசி
17	30	வெ	திர48-55	மக-11-43	ம11-43சி	பிரதோஷம், மதன திர
18	31	சனி	சது40-25	பூர-5-48 உத்-58-53	சி5-48மர	பங்குனி உத்ரம் [யோதசி
19	1	ஞா	○ 31-18	அஸ்-51-30	சித்-60	கரிநாள்
20	2	திங்	பிர21-50	சித்-44-5	பிர44-5அ	சைத்ரபகுளம்
21	3	செவ்	து12-33	சுவா-37-0	சி37-0மர	மாடுவாங்க, வாகனமேற
22	4	புத	திரி4-3 சது56-25	விசா-30-45	சித்-60	
23	5	வியா	பஞ்50-10	அனு-25-43	சி25-43பி	
24	6	வெ	சஷ்45-35	கேட்-22-13	ம22-13அ	
25	7	சனி	சப்42-48	மூல-20-33	சித்-60	
26	8	ஞா	அஷ்42-3	பூரா-20 ..	சித்20-0அ	
27	9	திங்	நவ43-10	உத்-22-53	ம22-53அ	
28	10	செவ்	தச46-8	திரு26-45	சித்-60	
29	11	புத	ஏ50-25	அவி32-8	பி32-8சித்	
30	12	வியா	து55-50	சதை38-38	ம38-38சி	தானியம், மாடு முதலானவை வாங்க

1923ஞு ஏப்ரல்மீ

சூரி	செ		
கே பு	12உ கும்-சுக் 13,,மீன-புத 23,,ரி-சே 28,,மே-புத		
சுக்			ராகு
		குரு	சனி

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE “ANANDA BODHINI” POWER PRESS, 15, VENKATESA MAISTRY ST., MADRAS.